இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 120 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 24 – ஞாயிற்றுக்கிழமை 10 டிசம்பர் 2023 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 120: Thiruvalluvar Year - 2054 - Karthigai 24 - Sunday 10 December 2023 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

# வரலாறு படைப்போம்; வாரீர் நெல்லைக்கு!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.24 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

இளைஞர் எழுச்சி குறித்தும் - இளைஞர்கள் புரிந்துள்ள இமாலய சாதனைகள் பற்றியும் - இன்றுடன் நான் எழுதிய பதினைந்து கடிதங்களை, வரலாற்றுக் கருவூலமெனப் போற்றிப் பாராட்டி, புகழ்ந்துரைத்து, உன் போன்றோர் பொழிந்துள்ள வாழ்த்துகளை முத்தமிட்டுப் பையில் திணித்துக் கொள்வதில் பெருமையுறுகிறேன். அதற்குள் சில ஆத்திரக்காரர்களுக்கு, அவசரக்காரர்களுக்கு ஏற்கெனவே அவர்தம் நெஞ்சில் நிரம்பியுள்ள அசூயை, கொதிப்பேறிப் பொங்கி வழிந்து, அத்துடன் நஞ்சும் கலந்து, ஏதேதோ "திருவாய்ச் சிந்து" பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

★ அவர்கள் என்ன! நேற்றைய நாளில் அரசு தலைமைச் செயலகத்தில், பதினெட்டுப் பச்சிளம் குழந்தைகளின் இருதய சிகிச்சைக்காக அரசு சார்பில் சிகிச்சை கட்டணத்தில் பெரும்பகுதியை, அதாவது 90 சதவிகித அளவிற்கு அரசே செலுத்துவதற்கு ஒப்புதல் அளித்து, நல் மனம் படைத்த மருத்துவமனை உரிமையாளர்கள் ஒவ்வொருவருடனும் ஒப்பந்தம் செய்து, அந்தக் குழந்தைகளுக்கு அதற்கான பதிவு அட்டைகள் வழங்கினேனே! அதைப் பற்றி நினைத்தார்களா?

★ நேற்றையதினமே, 450 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழக அரசின் டிட்கோ நிறுவனமும், பிரபல மருத்துவ நிபுணர் டாக்டர் கே.எம். செரியன் அவர்களின் பிரான்டியர் லைப்லைன் நிறுவனமும் இணைந்து, மருத்துவ கிராமம் ஒன்றினைத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானதே! அதைப்பற்றி இந்த அசூயையாளர்கள் அறிவார்களா?

★ அதுமாத்திரமல்ல, தமிழக அரசின் சார்பில் இந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய்க்கான தொழில் முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, அந்தத் திட்டங்கள் எல்லாம் நடைமுறையில் இருந்து வருகின்ற நேரத்தில், நேற்றைய தினம் தலைமைச் செயலகத்தில், மிகப்பெரிய தொழில் நிறுவனமான "போர்டு" தொழிற்சாலையின் ஆசியா பசிபிக் மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளுக்கான செயல் துணைத் தலைவர் ஜான் பார்க்கர் அவர்கள் என்னைச் சந்தித்தபோது, மேலும் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழகத்திலே திட்டம் தொடங்கிடவிருப்பதாகவும் அறிவித்துச் சென்றிருக்கிறார். அன்றாடம் அறிக்கை விட்டுக்கொண்டிருப்போர் அறியமாட்டார்களா இதனை?

★ தேர்தல் வாக்குறுதியாக அறிவித்து, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்க முடிவு செய்து அதற்காக வெளிப்படையான ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் கோரி, சட்டமன்றக் கட்சித் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு எனது தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் முன்னிலையில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டு, 25 லட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு, 18-11-2007 வரை 23 லட்சத்து, 79 ஆயிரத்து, 721 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு, அவற்றில் 21 லட்சத்து 32 ஆயிரத்து 956 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளனவே! மேலும் 750 கோடி ரூபாய்ச் செலவில், 34 லட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்து வழங்குவதற்காக முடிவு செய்யப்பட்டு, வருகிற 27ஆம் தேதி முதல் அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர்கள் பங்கேற்று அவைகளை வழங்கப் போவதாக அறிவித்துள்ளோமே, அதைப்பற்றி பாராட்டுரை பகரப் போகிறார்களா?

## கலைஞர் கடிதம்

★ இதுபோலவே, ஏழை எளிய தாய்மார்களுக்கு இலவசமாக எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகள் வழங்கிடுவோம் என்று அறிவித்து,

16-11-2007 வரை 3 லட்சத்து ஓர் ஆயிரத்து 560 எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்புகள் வழங்கப்பட்டு, தொடர்ந்து 27-11-2007 முதல் மேலும் எட்டு இலட்சம் எரிவாயு அடுப்புகள் வழங்கப்படவுள்ளனவே! இதனைப் பற்றி எரிச்சல்காரர்கள் புகழப் போகிறார்களா?

★ 1 இலட்சத்து 16 ஆயிரத்து 508 நிலமற்ற ஏழை விவசாயி - விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 1 லட்சத்து 33 ஆயிரத்து 688 ஏக்கர் நிலம் இலவசமாக அரசின் சார்பில் அளிக்கப்பட்டுள்ளதே, இதுகுறித்து பாராட்டு வழங்கப் போகிறார்களா?

★ 2 வயது முதல் 15 வயது வரை உள்ள 71 லட்சம் குழந்தைகள், மாணவர்களுக்குச் சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டைகள் வழங்கப்படுகிறதே, அதைப் பற்றி கருத்து தெரிவிக்கப் போகிறார்களா?

★ 1 கோடியே 78 லட்சத்து 240 குடும்பங்களுக்கு கிலோ அரிசி 2 ரூபாய் வீதம், மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறதே, எரிச்சல்காரர்கள் அதுபற்றி என்ன சொல்லப் போகிறார்கள்?

★ 22 லட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு, சுமார் 7000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்திருக்கிறோமே, இன்றைக்கு ஆர்ப்பாட்டம் செய்வோர் அதற்காக வரவேற்பு தெரிவித்ததுண்டா?

★ 10-11-2007 வரை 2 லட்சத்து 7 ஆயிரத்து 287 வீட்டு மனைப் பட்டாக்கள் இலவசமாக வழங்கப்பட்டிருப்பதோடு, கடந்த 14-ந்தேதியன்று அதுபற்றி ஆய்வு நடைபெற்று, இலவச வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கிட எந்தவிதமான வருமான உச்ச வரம்பும் கிடையாதென்று அறிவித்திருக்கிறோமே! எது எதற்கோ வக்கணை பேசுவோர், அதைப் பற்றி பாராட்டு கூறியிருக்க வேண்டாமா?

★ 1 இலட்சத்து 60 ஆயிரத்து 531 விவசாயக் குடும்பங்களுக்கு விவசாயி - விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு நல உதவித் திட்டத்தின் கீழ், 69 கோடியே 29 லட்சத்து 11 ஆயிரத்து 719 ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளதே, அதைப்பற்றி ஒரு வார்த்தை உண்டா?

★ கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மட்டும் 73 ஆயிரத்து 665 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்காக 110 கோடியே 49 லட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்காக - 4 லட்சத்து 72 ஆயிரத்து 20 கர்ப்பிணி பெண்களுக்காக 206 கோடியே 14 லட்சத்து 33 ஆயிரம் ரூபாயும் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ளதே, கேலி பேசுவோர் இதைப் பற்றியெல்லாம் கனவிலாவது நினைத்தது உண்டா?

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

## 'மிக்ஜாம்' புயல் பேரிடர்: முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு என்னுடைய ஒரு மாத ஊதியத்தை வழங்குகிறேன்!

# அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் - ஒரு மாத ஊதியத்தை வழங்கிடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, டிச. 10-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில், "மிக்ஜாம் புயல் பேரிடர் பாதிப்பிலிருந்து மீள முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு என்னுடைய ஒரு மாத ஊதியத்தை வழங்குகின்றேன்.**

**அனைத்து சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது ஒரு மாத ஊதியத்தை அளித்திடுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:-

மிக்ஜாம் புயலால் கடந்த டிசம்பர் 2 முதல் 4ஆம் தேதி வரை சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கொட்டித் தீர்த்த மழை என்பது, 47 ஆண்டுகால வரலாற்றில் இல்லாத அளவிலான பெருமழை. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ 1 கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தப் பேரிடர் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிடர் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்குமே ஏற்பட்டுள்ள பேரிடர்.

மழைநீர் வடிகால் பணிகளை முன்கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுத்தி இருந்ததால்தான் பேரழிவு தவிர்க்கப்பட்டது. அதேபோல் அனைத்துத் துறைகளும் பேரிடரை எதிர்கொள்ளத் தயார் நிலையில் இருந்ததும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வைத்திருந்ததும் இணைந்து மக்களைக் காத்துள்ளது. இருப்பினும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் நடைபெற்ற மீட்புப் பணிகளின் காரணமாக மூன்று நாட்களுக்குள் பெரும்பாலான இடங்கள் மீட்கப்பட்டு



இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி உள்ளது. குறிப்பிட்ட சில பகுதிகளில் மீட்புப் பணி நடந்து வருகிறது. இத்தகைய அசாதாரண நேரத்தில் அனைத்துத் தரப்பும் மக்களுக்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்கள் மீள்வதற்கு உதவியாக நல்லுள்ளங்கள் பலர் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தங்களுடைய பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த இயற்கைப் பேரிடரிலிருந்து மீள்வதற்கான கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்ட வேண்டியது அவசியமாகிறது.

எனவே, அரசின் முனைப்பான முயற்சிகளுக்கு நமது சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினரும் தங்களால் இயன்ற வகையில் உதவி செய்ய வேண்டியது அவசியம். இச்சூழலில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக நிதி வழங்கிட வேண்டுமென்று உங்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன். அதன் தொடக்கமாக என்னுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்குகிறேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களும் தங்களுடைய ஒரு மாத கால ஊதியத்தை முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 10-12-2023

# 2015 ஆம் ஆண்டும் 2023 ஆம் ஆண்டும்

**2015** ஆம் ஆண்டு என்ன நடந்தது என்பதையே அறியாமல் - 2023 ஆம் ஆண்டையும் அதனையும் ஒப்பிட்டு சிலர் உளறி வருகிறார்கள்.

★ 2015 பெருவெள்ளத்தின்போது பெய்த மழையளவு 33 செ.மீ - 2023 ஆம் ஆண்டு இரண்டு நாட்களில் மட்டும் 47 செ.மீ. மழை கொட்டித் தீர்த்திருக்கிறது. இதனை அவர்கள் முதலில் உணர வேண்டும்.

2015இல் மக்களுக்கு முன்னறிவிப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை. மக்கள் உறங்கிக் கொண்டிருந்த இரவு நேரத்தில் செம்பரம்பாக்கம் ஏரி திறந்து விடப்பட்டது. மழை நீர்க் கால்வாய்கள் சரி செய்யப்படாத காரணத்தினால் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தது. பத்து நாட்கள் வரை நீர் வடியவில்லை. தொலைத் தொடர்பு முழுமையாகத் துண்டாகியது. சென்னை முழுவதுமாக ஸ்தம்பித்தது. பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு கடுமையாக நிலவியது. பல இடங்களில் பத்து நாட்களுக்குப் பிறகே மின் இணைப்பு வழங்கப்பட்டது. 289 பேர் உயிரிழந்தனர். 23.25 லட்சம் வீடுகள் மூழ்கின. அமைச்சர்களோ முதலமைச்சர் ஜெயலலிதாவோ களத்திற்கு வரவில்லை.

2015-ஆம் ஆண்டு சென்னையில் பெரு வெள்ளம் ஏற்பட்ட போது சென்னையின் மேயராக இருந்தவர் அ.தி.மு.க.வைச் சேர்ந்த சைதை துரைசாமி. அப்போது அவர் செயல்படாமல் முடங்கிக் கிடந்தார். வெள்ளச் சேதத்தைப் பார்வையிடச் சென்ற மேயர் சைதை துரைசாமியை 'டைம்ஸ் நவ்' டிவி நிருபர் பேட்டியெடுக்க முற்பட்ட போது சைதை துரைசாமி பயந்து ஓட்டம் பிடித்தார்.

"சார்.. மழை வெள்ளச் சேதத்தில் சென்னை மாநகராட்சி தோல்வியடைந்துவிட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளதே, அதுபற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்லுங்கள்" என அந்த நிருபர் தொடர்ந்து கேள்வி எழுப்பிய போது மேயர் சைதை துரைசாமியோ கேமராவைவிட்டு திரும்பி நின்று கொண்டார், "ப்ளீஸ்... என் 'நிலைமையை' புரிந்து கொள்ளுங்கள்" என்று நிருபரைப் பார்த்துக் கெஞ்சி விட்டு கடைசி ஓட்டம் பிடித்தார். இப்போதைய சென்னை வெள்ளத்தைப் பாருங்கள். இப்போதைய மேயர் ப்ரியா, முழுக்க முழுக்க களத்தில் நிற்கிறார்.

**2015 சென்னை வெள்ளத்தில் தன்னார்வலர்கள் அளித்த நிவாரணப் பொருட்களில் எல்லாம் ஜெயலலிதாவின் படம் போட்ட 'ஸ்டிக்கர்'களை ஒட்டி அரசே வழங்கியது போல தோற்றத்தை ஏற்படுத்தினார்கள் அ.தி.மு.க.வினர். அந்த ஏமாற்றுக்காரர்கள்தான் இப்போதை மழை வெள்ளத்திலும் பொய்களை விதைக்கிறார்கள்.**

2015ல் மீனம்பாக்கம் விமான நிலையம் ஒரு வாரத்திற்கு மூடப்பட்டிருந்தது. சென்னை நகரம் ஒட்டுமொத்தமாக இரண்டு வாரங்கள் முடக்கப்பட்டது. தரைவழியாகச் சேதங்களைப் பார்வையிட முதலமைச்சர் ஜெயலலிதா வரவில்லை. பிரதமர் மோடி வந்தபோது ஹெலிகாப்டரில் தான் அவற்றை முதலமைச்சர் ஜெயலலிதா பார்த்தார். ஜெயலலிதாவின் தொகுதிதான் சென்னையிலேயே அதிகம் பாதிப்புக்குள்ளான இடம். அங்குள்ள மக்கள் அரசு நிவாரண உதவிகளை நான்கு நாட்களுக்குப் பிறகுதான் வாங்கினார்கள்.

2015 பெரு வெள்ளத்திற்குப் பிறகு ஐந்தரை ஆண்டுகளை ஆண்டது அ.தி.மு.க. அரசுதான். அந்தப் படிப்பினையை வைத்து எதையும் செய்யவில்லை.

**ஆனால் 2023 ஆம் ஆண்டான இப்போது அனைத்துக்கும் தயார் நிலையில் இருந்தது தமிழ்நாடு அரசு. ஐந்து நாட்களுக்கு முன்பு இருந்தே முன்னேற்பாடுகளை முடுக்கிவிட்டுக் கொண்டு இருந்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். மழை நீர் வடிகால் பணிகள் திட்டமிடப்பட்டு அதில் 60 முதல் 80 விழுக்காடு பணிகள் முடிவடைந்து இருந்தன. இரண்டரை ஆண்டுகளில் 3,031 கிலோ மீட்டருக்கு மழை நீர் வடிகால்கள், 33 மைக்ரோ ஏரிகள், 16 இதர ஏரிகள் அமைக்கப்பட்டுள்ளன. புதிய மின்கம்பங்கள், ட்ரான்ஸ்பார்மர்கள், பில்லர் பாக்ஸ்கள் அமைக்கப்பட்டு தயார் நிலையில் மின்சார வாரியம் இருந்தது.**

**சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு 'அலெர்ட்' தரப்பட்டது. மழை பாதிப்பு மாவட்டங்களுக்கு மழைக்கால பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு களத்திற்கு அனுப்பப்பட்டனர்.**

வரலாறு காணாத பெருமழை பெய்த போதும் சூழல் முழுமையாகக் கட்டுப்பாட்டில் இருந்தது. புயலால் கடல் கொந்தளிப்பு அதிகம் இருந்ததால் மழைநீர் கடலுக்குள் சென்று கலக்க முடியாத சூழலில் தேங்கியது. மழை நின்ற ஒன்றிரண்டு மணி நேரத்தில் பல இடங்களில் நீர் வடியத் தொடங்கியுள்ளது. மழையில் சாய்ந்த மரங்கள் ஒரு நாள் இரவிலேயே முழுமையாக அகற்றப்பட்டுள்ளன. படிப்படியாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. இரண்டாவது நாளில் முழுமையாக அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் தரப்பட்டு விட்டது.

**மொத்த அமைச்சரவையும் களத்தில் நிற்கிறது. அனைத்து அரசுத் துறைகளும் களத்துக்கு வந்துவிட்டன. 5000 தூய்மைப் பணியாளர்கள் வெளியூர்களில் இருந்து சென்னை வந்திருக்கிறார்கள். பல இடங்களில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுவிட்டனர். பால் வழங்கல் ஒரே நாளில் சரி செய்யப்பட்டது. வெளிமாநகரங்களில் இருந்தும் பால் பாக்கெட்டுகள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டன.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தினமும் - பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்து வருகிறார். உதவிகளைச் செய்து வருகிறார். அமைச்சர்கள், மக்களோடு மக்களாக இருக்கிறார்கள். நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், தி.மு.க. நிர்வாகிகளும் களத்தில் நிற்கிறார்கள். இவை எதையும் 2015 பார்த்திருக்க முடியாது. அ.தி.மு.க. ஆட்சிக்கும் தி.மு.க. ஆட்சிக்குமான வித்தியாசம் இதுதான்.**

முதலமைச்சரின் கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டதாக ஆட்சியும் கட்சியும் இருப்பதால்தான் இரண்டு தரப்பும் குதிரை வேகத்தில் செயல்பட்டு, இயற்கைப் பேரிடரை வென்று காட்டி வருகிறது.

●●

## ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை! ரிசர்வ் வங்கி அறிவிப்பு!

மும்பை, டிச. 10 -

வங்கிகளுக்கான குறுகிய கால கடன்களுக்கான ரெப்போ வட்டி விகிதத்தை தொடர்ந்து 5வது முறையாக ரிசர்வ் வங்கி மாற்றவில்லை.

நாட்டில் உள்ள வணிக வங்கிகளுக்கு குறுகிய காலமாக அளிக்கும் கடனுக்கு ரிசர்வ் வங்கி வசூலிக்கும் வட்டியே ரெப்போ வட்டி ஆகும். இந்த ரெப்போ வட்டி விகிதத்தை கடந்த 4 முறையும் ரிசர்வ் வங்கி மாற்றவில்லை. இந்நிலையில் மும்பையில் ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை கமிட்டி கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ், <Gfx card in> ரெப்போ வட்டி விகிதம் தற்போதைய 6 புள்ளி 5 சதவீதமாகவே நீடிக்கும் என்றும், இதில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். நாட்டில் பணவீக்கம் குறைந்து வருவதாகவும், அதனாலேயே ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றம் செய்வதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சக்திகாந்த தாஸ் குறிப்பிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (8.12.2023) தலைமைச் செயலகத்தில், டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய் வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, டி.வி.எஸ். குழும இயக்குநர் சேகர் ஆகியோர் உள்ளனர்.

## மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில்

# பொது விநியோகத்தில் பொருள்கள் தங்கு தடையின்றி விநியோகம்!

### அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!

சென்னை, டிச.10-

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பொது விநியோகத்திட்ட அங்காடிகளில் இன்றியமையாப் பொருள்கள் விநியோகம் மற்றும் பெட்ரோல், டீசல் விநியோகம் குறித்து உயர் அலுவலர்களுடன் அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனை மேற்கொண்டார்.

இதுகுறித்த அரசு செய்தி வருமாறு :-

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று முன்தினம் (08.12.2023) பொது விநியோகத் திட்டத்தில் இன்றியமையாப் பொருள்கள் விநியோகம் மற்றும் பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு விநியோகம் குறித்து துறை அலுவலர்களுடன் தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார்.



சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பொது விநியோகத் திட்ட அங்காடிகள் அனைத்தும் செயல்படுகின்றன.

இந்த மாவட்டங்களில் பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்களில் 11 தவிர அனைத்து விற்பனை நிலையங்களும் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. 11 விற்பனை நிலையங்களும் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடைகளுக்குள் நீர் புகுந்ததால் வீணான பொருள்களை உடனடியாக அப்புறப்படுத்தவும் அதற்குப் பதிலாகப் புதிய பொருள்களை வழங்கிடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், அனைத்துக் கிடங்குகளிலும் நியாயவிலைக் கடைகளிலும் அனைத்துப் பொருள்களைப் பாதுகாப்பாக இருப்பு வைத்திடவும்,

அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அத்தியாவசியப் பொருள்களைத் தடையின்றி தரமாக வழங்குதலை உறுதிப்படுத்திடவும், தொடர்மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறப்பு நேர்வாக காய்கறிகள் மற்றும் வெங்காயம் ஆகியவற்றை அமுதம் பல்பொருள் அங்காடிகள் மூலம் விற்பனை செய்திடவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், டாக்டர் கே. கோபால், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர்சஹாய் மீனா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் ஆ. அண்ணாதுரை மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு நிவாரணப் பொருட்கள் !

## சென்னைக்கு 2 கனரக வாகனங்களை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், முனைவர் கோவி. செழியன் அனுப்பி வைத்தனர்!

நாமக்கல், டிச. 10-

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தொடங்கிய பின்னர், கடந்த இரண்டு நாட்களாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில், வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள 'மிக்ஜாம்' புயல் காரணமாக, தொடர்ந்து பெய்து வந்த வரலாறு காணாத மழையால், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இந்த புயல் மழையின் தாக்கம் மிக அதிகமாக ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மேற்பார்வையில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடியாக தேவையான நிவாரணம் வழங்கப்பட்டு வருவதுடன், சீரமைப்புப் பணிகளும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகராட்சியில் உள்ள ஒவ்வொரு மண்டலத்திற்கும், ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலரும், தாம்பரம் மற்றும் ஆவடி மாநகராட்சிகளுக்கென தலா ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலரும் நியமிக்கப்பட்டு, அவர்கள் அனைவரும் களத்தில் பணியாற்றி வருகின்றனர். இதற்காக பல்வேறு மாவட்டங்களில் இருந்து தீயணைப்பு வீரர்கள், தூய்மை பணியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றனர். இதுதவிர நிவாரணப் பொருட்களும் சென்னைக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அதன்படி, நாமக்கல் மாவட்ட நிர்வாகம் சார்பில் சென்னை மாநகராட்சி மண்டலம் 14 க்குட்பட்ட பகுதிகளுக்குத் தேவையான ரொட்டி, பால் பவுடர், தண்ணீர் பாட்டில், பாய், போர்வை, நைட்டி, நாப்கின்கள், மெழுகுவர்த்திகள் உள்ளிட்ட பல்வேறு நிவாரண பொருட்களை 05.12.2023 நள்ளிரவு சென்னைக்கு கனரக வாகனத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

தொடர்ந்து, நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பால் பவுடர், பிஸ்கட், அரிசி, சமையல் எண்ணெய், ரவை ஆகிய சமையல் பொருட்கள் மற்றும் பிரட், பாய், போர்வை, கைலி, சோப், துண்டு, தேங்காய் எண்ணெய், நாப்கின், மெழுகு, தீப்பெட்டி உள்ளிட்ட பல்வேறு நிவாரணப் பொருட்களை சென்னைக்கு கொண்டு செல்லும் 2 கனரக வாகனங்களை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலையில் அனுப்பி வைத்தனர்.

இந்நிகழ்வில் நாமக்கல் நகர் மன்றத் தலைவர் து. கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) த.மாதவன், மாவட்ட வழங்கல் அலுவலர் த.முத்துராமலிங்கம், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், தமிழ்நாடு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சரும், கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழிகாட்டுதலுடன், சென்னையில் வரலாறு காணாத தொடர் மழை மற்றும் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சென்னை, சேப்பாக்கம் தொகுதி பொதுமக்களுக்கு வழங்க 50ஆயிரம் கிலோ (50டன்) அரிசி பைகள் மற்றும் 20,000 குடிநீர் பாட்டில்கள் அடங்கிய நிவாரணப் பொருட்களை தமிழ்நாடு இளைஞர் நலன்,விளையாட்டு மேம்பாட்டு மற்றும் சிறப்பு திட்ட செயலாக்க துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம், கடலூர் கிழக்கு மாவட்ட பொருளாளரும், எம்.ஆர்.கே. கல்வி குழுமத்தின் தலைவர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் வழங்கினார். சென்னை மேற்கு மாவட்டச் செயலாளரும், சென்னை பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# வரலாறு படைப்போம்; வாரீர் நெல்லைக்கு!


## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி


மக்களின் தேவைகளுக்காக நிறைவேற்றப்படும் திட்டங்கள் பற்றி அவர்களுக்கென்ன கவலை? இப்போது அவர்களது கவலையெல்லாம் திருநெல்வேலியில் விரைவில் நடைபெறவிருக்கும் மாநில இளைஞர் அணி மாநாட்டைப் பற்றித்தான்! அதற்காகத்தான் அந்த நண்பர்கள் பேசுகிறார்கள். கண்டனம் - கேலியென முழங்குகிறார்கள்.

உலகின் வரலாற்று நாயகர்களைப் பற்றி - தியாக சீலர்களைப் பற்றி - தீரர்கள், வீரர்கள் பற்றி எழுதினால்;

இப்போதுதானே இதெல்லாம் இளைஞர்களைக் கவர்ந்திழுக்க எழுதுகிறார் - என்று தங்களுக்கே உரிய நாராச நடையில் பொய், புளுகு, புரட்டுக்களை அறிக்கைகளாக்கி, என் எழுத்துக்கு உள்நோக்கம் கற்பித்து வெளியிட்டு மகிழ்கிறார்கள்.

இளைஞர்கள், இன உணர்வு பெற வேண்டுமென்றும் - இயக்கத்தின் இலட்சியங்களை உணர்ந்து இடையறாப் பணி ஆற்ற வேண்டுமென்றும் - என் உள்ளத்தில் என் இளம் பிராயத்திலேயே (1937-1938) 13 வயதிருக்கும் போதே "செல்வ சந்திரா" எனும் புதினம் எழுதி, அதன் முன்னுரையிலேயே


தமிழ் வாழ்க! தமிழர் வாழ்க!
முன்னுரை
அன்புடையீர்,


T.M. கருணாநிதி

இவ்வாறு குறிப்பிடும் அளவுக்கு இலட்சிய தாகம் இருந்துள்ளது. மேலே வெளியிடப்பட்டுள்ள என் கையெழுத்து ஆதாரம் "கலைஞரின் கவிதை மழை" என்ற பெரிய நூலில் வெளியிடப்பட்டுள்ளதை, எப்போது வேண்டுமானாலும் எரிச்சல்கார நண்பர்கள் பார்த்துத் தெளிவு பெறலாம்.

அதைத் தொடர்ந்து 1942-இல் அண்ணாவின் "திராவிட நாடு" இதழில்; "இளமைப் பலி" என்ற எனது கட்டுரையும் வெளி வந்துள்ளது.

அதன் பிறகு 1945இல் - நான் எழுதிய "கிழவன் கனவு" என்ற குறுங் கதைப் புத்தகம் வெளி வந்ததில் - "எங்கு பார்க்கினும் விடுதலை விருத்தம்! எங்கும் சம தர்ம சங்கநாதம்! தமிழொளியை அரசியலில் இணைத்து திராவிடர் உரிமையோடு, உடைமையோடு, உண்மையோடு உள்ள எழுச்சியோடு உவகை உந்த வாழ்ந்திடும் வரலாறு! ஒரு தமிழன் தன்மானமின்றி அய்யரைச் சாமி என்றழைத்ததற்காக ஆறு மாத கடுங்காவல்! சாது எனக் கூறி, சூது செய்த ஒருவன் சாகும் வரையில் சிறைப்பட்டான்! பட்டமும் பதவியும் நமது திட்டமென ஒரு பத்திரிகாசிரியன் எழுதியதற்காக மக்கள் மன்றத்திலே அவன் மண்டுகம் எனப் பட்டான். ஏழையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மிகுதியாக ஏற்பட்டதாம் ஆநிரைகோ என்ற தமிழனுக்கு! சாதி, மதம், கடவுள்கள் என்ற கற்பனைப் பூச்சாண்டிகள் ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் உலவின என்று உரநெஞ்சன் என்ற சரித்திர ஆசிரியர் ஒரு நூலில் குறிப்பிட்டிருந்தார். இந்தி எதிர்ப்பு! சிறைச்சாலை! தாளமுத்து, நடராஜன் களப்பலி! தமிழைக் காக்கச் சிறை சென்ற பெண்மணிகளின் புறநானூறு! மானங்காக்க மாணவர் செய்த கிளர்ச்சி! ஓமான் கடல் மறைத்த சா். ஏ.டி.பன்னீர்செல்வம்! இதனை அந்தக் கிழவன் கனவாகக் கண்டான்" என்று குறிப்பிட்டிருப்பதை கருத்துக் குருடர் தவிர மற்றவர்கள் கண்டு மகிழ முடியும். அது என்ன! இப்போது எழுதியதா? 84 வயதில்? இல்லை! 1945இல் - என் 21வது வயதில் எழுதியது! நூலின் பெயர் "கிழவன் கனவு" அப்போது விலை ரூ.1.25 - அதை அப்போது எழுதிய இந்த இளைஞனுக்கு வயது, 21 தான்! பொல்லாங்கு பேசுவோர் இதைப் புரிந்து கொள்வது நல்லது!

1942ஆம் ஆண்டு, 18 வயதிலேயே அண்ணாவின் "திராவிட நாடு" வார இதழில் "இளமைப் பலி" என்ற கட்டுரை எழுதியவன் நான். எனவே இலட்சியத்துக்காக இளமையைப் பலி கொடுக்கவும், இதோ தயார்! என எழுந்த இளைஞர் கூட்டத்தில் ஒருவன்தான், இன்று முதிர்ந்த வயதில் மாநில இளைஞர் அணி மாநாட்டுக்காக - வரலாற்று நாயகர்கள் பற்றி 15 கட்டுரைகள் தீட்டி, அவர்களின் நாட்டுப் பற்று - சமுதாயப் பற்று - போன்ற கொள்கைக் கோட்பாடுகளை, இலட்சிய வேட்கைகளை நினைவூட்டி - புதியதோர் இளைஞர் எழுச்சி பூத்துக் குலுங்கிட எழுதுகோல் எடுத்து,

இளைஞனே

விழி! எழு!

நல் எண்ணங்களை எங்கணும் நடு!

எனத் தீட்டிடுக!

தீரர்களுக்கான அழைப்பு என்று வீர இளைஞர்காள்! உமை வேண்டுகிறேன்.

மாநாட்டுத் தலைவரும், மாநில இளைஞர் அணிச் செயலாளருமான தம்பி மு.க. ஸ்டாலின், காற்றினும் கடிய வேகத்தில் மாநாட்டுக்கான ஆக்கப் பணிகள் அருமையாக அமைந்திட -

அங்கிங்கெனாதபடி எங்கெங்கும், சுற்றுப் பயணம் செய்கிறார்.

அவருடன் இளைஞர் அணியின் எழுச்சிப் படையும் அணிவகுத்திடக் கண்டு அகமகிழ்கிறேன்.

மாநாட்டுக்கான முதல் விளம்பர அழைப்பே, முத்துக் கோத்தது போல் நம்மை முறுவலித்திட வைக்கிறது!

மேலும் அடுத்தடுத்த சிறப்புகளை டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில் நெல்லையில் காண்போம்.

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 23.11.2007)

---

மிக்ஜாம் புயல்; சேதமடைந்த வாகனங்களுக்கு

# காப்பீட்டுத் தொகையினை உடனடியாக வழங்கிடுவீர்!

### காப்பீட்டு நிறுவனங்கள் - மோட்டார் வாகன விற்பனையாளர் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!

சென்னை, டிச.10-

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட வாகனங்களுக்கு காப்பீட்டுத் தொகையை விரைவாக வழங்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பெருமழையின் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பல்வேறு வகையான வாகனங்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் சேதமடைந்துள்ளன.

காப்பீடு செய்யப்பட்ட சேதமடைந்த வாகனங்களுக்கு விரைவாக காப்பீட்டுத் தொகையை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய காப்பீட்டு நிறுவனங்கள், மோட்டார் வாகன விற்பனையாளர் சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருடன் நேற்று முன்தினம் (8.12.2023) தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்ட மாநிலத்தின் 13 முக்கிய காப்பீட்டு நிறுவனங்கள், இதுவரை 600 இருசக்கர, 1275 நான்குசக்கர மற்றும் 445 வணிக வாகனங்கள் என மொத்தம் 2,320 மோட்டார் வாகனங்களுக்கு காப்பீட்டுத் தொகைக்கான விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன எனத் தெரிவித்தனர். இதனையும் இனிவரும் நாட்களில் பெறப்படும் காப்பீட்டு விண்ணப்பங்களையும் உடனடியாக தீர்வு செய்வதற்கு அமைச்சர் பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள்.

மேலும், புயலால் பாதிக்கப்பட்ட இத்தருணத்தில், அனைத்து காப்பீட்டு நிறுவனங்களும் மனிதாபிமான அடிப்படையில் பொதுமக்களுக்கு உதவும் விதமாக விரைந்து செயலாற்றவும் வலியுறுத்தினார்கள். அனைத்து காப்பீட்டு நிறுவனங்களையும் குறுஞ்செய்தி, வாட்ஸ்அப் மற்றும் இதர சமூக ஊடகங்கள் மூலமாகவும், உதவி மையங்கள்/ சிறப்பு முகாம்கள் அமைத்தும் எளிதான முறையில் வாகன காப்பீட்டுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெற்று தீர்வு காண அறிவுறுத்தப்பட்டது. வெள்ளத்தால் அதிகமாக பாதிக்கப்பட்ட இடங்களில் சிறப்பு முகாம்களை நடத்திடவும், பொதுமக்களுக்கு காப்பீட்டுகளின் மூலம் இழப்பீடுகளை பெறுவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் வலியுறுத்தப்பட்டது.



இப்பேரிடர் நிவாரண காலத்தில் மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிட உதவிடும் வகையில் சேதமடைந்த வாகனங்களை நேரில் சென்று விரைந்து ஆய்வு செய்து காப்பீட்டு தொகையினை மக்களுக்கு துரிதமாக வழங்கிட அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தினார்கள். பேரிடரின் தன்மையை கருத்தில் கொண்டு அனைத்து காப்பீட்டு நிறுவனங்களும் பொது மக்களுக்கு உதவிடும் வகையில் நெறிமுறைகளை இயன்ற வரை எளிதாக்கி இழப்பீட்டினை வழங்கிட அறிவுறுத்தினார்கள். மோட்டார் வாகன விற்பனையாளர் சங்கக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை ஏற்று, வாகனங்களை பழுது பார்ப்பதற்கு காலி இடங்களை கண்டறிந்து அரசு தரப்பிலிருந்து தற்காலிகமாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், சேதமடைந்த வாகனங்களை பழுதுபார்ப்பு நிலையங்களுக்கு மொத்தமாக கொண்டு செல்வதற்கான இழுவை வாகனங்களை பிற மாவட்டங்களிலிருந்து கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நிதித்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் துறை சார்ந்த மற்ற அலுவலர்களும் பங்கேற்றனர். இக்கூட்டத்தின் முடிவில், அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களை ஏற்று அரசுடன் இணைந்து மிக்ஜாம் புயலால் சேதமடைந்த காப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை விரைவாக பழுது பார்த்துத் தரவும், காப்பீட்டுத் தொகையினை விரைந்து வழங்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சம்பந்தப்பட்ட அமைப்பினர் உறுதி அளித்தனர்.



சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் மிக்ஜாம் புயல் கனமழையால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் களையப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்து நிவாரண உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் பகுதி, வட்டம் 63, நைனியப்பன் தெருவைச் சேர்ந்த ஆயிரம் பொதுமக்களுக்கு அரிசி, மளிகைப் பொருட்கள், பால் மற்றும் போர்வை ஆகியவற்றை வழங்கினார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் எஸ்.மதன் மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மிக்ஜாம் புயல் கன மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி தொடர்ச்சியாக பல்வேறு நிவாரண உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதி, வட்டம் 63, உசேன் முல்க் தெருவில், 1000 பொதுமக்களுக்கு அரிசி, மளிகைப் பொருட்கள், பால், போர்வை ஆகியவற்றை நிவாரண உதவியாக வழங்கினார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரும்பாக்கம் எம்.எம்.டி.ஏ. பிரதான சாலையை சுற்றியுள்ள தெருக்களில் கனமழையால் உருவான கழிவுநீர், குப்பைக் கழிவுகள் அகற்றும் பணிகளை மேற்பார்வையிட்டு, மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். தொடர்ந்து உழைத்துக்கொண்டிருக்கும் சுகாதார பணியாளர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் ஒத்துழைப்பு நல்கிய பொதுமக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.




சென்னை மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி, திருவொற்றியூர் தொகுதி, எண்ணூர் சுனாமி குடியிருப்பில் உள்ள மக்களுக்கு பால், பிரட் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஆர்.என்.ராஜேஷ்குமார், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் கே.பி.பி.சங்கர், 1வது மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பகுதி கழக செயலாளர்கள், கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

டிசம்பர் 18 அன்று

# கோவையில் சிறுபான்மையினர் உரிமைகள் தினம்!

## மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அறிக்கை!



சென்னை, டிச. 10 -

கோவையில் வருகிற 18 ஆம் தேதி சிறுபான்மையினர் உரிமைகள் தினம் நடைபெறும் என்று சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த அவரது அறிக்கை வருமாறு:-

ஆண்டுதோறும் டிசம்பர் 18 அன்று இந்தியா முழுமையும், சிறுபான்மையினர் உரிமைகள் நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்க தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம், சிறுபான்மையினர் உரிமைகள் நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது.

2021இல் சென்னையிலும், 2022இல் மதுரையிலும் கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டு 2023 விழாவினை கோயம்பத்தூரில் கொண்டாட ஆணையம் சிறப்பான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இந்த ஆண்டு கோயம்பத்தூர் நிர்மலா மகளிர் கல்லூரியில் நடக்க இருக்கும் இவ்விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமை ஏற்கவும் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், அறிமுகவுரை, வரவேற்புரையாற்றுகின்றனர்.

வீட்டுவசதி துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வு துறை அமைச்சர் சு.முத்துசாமி, சமூக நலன் & மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், பால் வளத் துறை அமைச்சர் . த.மனோ தங்கராஜ் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர் முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா, முனைவர் இனிகோ இருதயராஜ், ஆளூர் ஷாநவாஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.நவாஸ் கனி, கோவை நடராஜன் மற்றும் கோவை மாநகராட்சி மேயர் ஏ.கல்பனா ஆகியோரும் சிறப்புரையாற்றுகின்றனர்.

கோவை கத்தோலிக்க உயர் மறைமாவட்ட ஆயர் தாமஸ் அக்வினாஸ், கோவை தென்னிந்திய திருச்சபை ஆயர் திமோதி ரவீந்தர் தேவ் பிரதீப், பெந்தகொஸ்தே திருச்சபை அப்போஸ்தலர் டாக்டர் டேவிட் பிரகாசம், கோவை ராமநாதபுரம் சீரோ மலபார் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர் மார் பால் ஆலப்பாட், தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை தலைவர் அல்ஹாஜ் பி.ஏ.காஜா முயீனுத்தீன் பாகவி, ஹிதாயத்துல் இஸ்லாம் ஷாபிய்யா ஜமாத் தலைவர் அல்ஹாஜ் எம்.ஏ. இனாயத்துல்லா, ஸ்ரீ கோயம்புத்தூர் ஜெயின் மகாசங்கம் தலைவர் பவர்லால்ஜி கோத்தாரி, ஸ்ரீ கோயம்புத்தூர் ஜெயின் மகாசங்கம் செயலாளர் குலாப்சந்த் மேத்தா ஆகியோர் ஆசியுரை வழங்குகிறார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் திருமதி. மு. ஆசியா மரியம் கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி நிர்மலா மகளிர் கல்லூரி செயலாளர் முனைவர் அருட்சகோதரி.குழந்தை தெரேஸ், நிர்மலா மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் அருட்சகோதரி. மேரி ஃபேபியோலா ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர் செயலர் வா.சம்பத் மற்றும் ஆணைய உறுப்பினர்கள் தமீம் அன்சாரி, ஹர்பஜன் சிங் சூரி, மஞ்சித்சிங் நய்யர், பிரவீன்குமார் டாட்டியா, பியாரிலால் ஜெயின், முனைவர் டான் போஸ்கோ, முனைவர் இருதயம், சங்கைக்குரிய பிக்கு மௌரியர் புத்தா ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள்.

இந்நிகழ்வில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக பி.எஸ்.சரவணக்குமார், ஏ.ஜெர்ரி லூயிஸ், க.உம்மர் சாகிப், கோவை ஆல்வின், எம்.ஆர்.முருகேசன், ஏ. சாதிக் பாட்ஷா ஆகியோர் இருந்து விழா ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

சிறுபான்மையினர் ஆணையம் துணைத் தலைவர் டாக்டர் இறையன்பன் குத்தூஸ், நன்றியுரை ஆற்றுகிறார். விழாவில் கோவை நிர்மலா கல்லூரி மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

கீழ்குந்தா, பிக்கட்டி பேரூராட்சிகளில் முடிக்கப்பட்ட

# வளர்ச்சி பணிகள் மக்கள் பயன்பாட்டுக்கு திறப்பு!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பங்கேற்பு!

நீலகிரி, டிச. 10-

நீலகிரி மாவட்டம் பிக்கட்டி பேரூராட்சி தக்கர் பாபா நகரில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.55 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு சிமெண்ட் சாலை மேம்பாட்டுப் பணி, தலையட்டியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.22.61 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட சுவருடன் கூடிய சிமெண்ட் சாலை பணி, 15வது நிதிக் குழு மானியத் திட்டத்தின் கீழ் நடுஹட்டியில் ரூ.9 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி என மொத்தம் ரூ.86.61 லட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டப் பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று திறந்து வைத்தார்.

இதைத்தொடர்ந்து, பிக்கட்டி, கீழ்குந்தா பேரூராட்களில் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்தார். பின்னர், அவர் கூறும் போது, "பிக்கட்டி தேர்வு நிலை பேரூராட்சியில் 2021 முதல் தற்போது வரை ரூ.4.62 கோடி மதிப்பில் 71 பணிகள் நடைபெற்றுள்ளன" என்றார். இந்த ஆய்வில், மாவட்ட ஆட்சியர் மு.அருணா, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) இப்ராஹிம்ஷா, உதவி செயற் பொறியாளர் ராஜா, கீழ்குந்தா பேரூராட்சி உதவிப் பொறியாளர் மோகன் ராஜ், குந்தா வட்டாட்சியர் கலைச்செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட இந்திரா நகர், எம்.டி.பி. கம்யூனிட்டி ஹால் முன்பாக செல்லும் சாலை, பைத்துல்மால் நகர், சி.டி.எம்.புரம் பொட்டல்விளைச் செல்லும் குறுக்கு தெரு மற்றும் இல்லத்தார் தெரு ஆகிய பகுதிகளில் ரூ. 45.50 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளை மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் துணை மேயர் திருமதி. மேரி பிரின்சி லதா, மாநகராட்சி இளநிலை பொறியாளர் திருமதி. தேவி, மண்டல தலைவர்கள் ஜவகர், திருமதி. அகஸ்டினா கோகிலவாணி, செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் அமல செல்வன், திருமதி. மோனிகா, திருமதி. பாத்திமா ரிஸ்வானா, சுப்பிரமணியன், ஸ்டாலின் பிரகாஷ், ஜெயவிக்ரமன், திருமதி. கலாராணி, மாநகராட்சி தொழில்நுட்ப அதிகாரிரவி, நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், செயற்குழு உறுப்பினர் சதாசிவன், பகுதி செயலாளர்கள் ஷேக்மீரான், துரை, ஜீவா, அணிகளின் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மிக்ஜாம் புயல் : நாம் இயல்பு நிலையை நெருங்கிவிட்டோம்!

# முழு இயல்பு நிலையை அடைந்துவிடுவோம்!

## நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு இருக்கும் அதிகாரிகளுக்கு தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா உறுதி!

சென்னை, டிச.10

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு இருக்கும் அதிகாரிகளை ஊக்கப்படுத்தும் வகையில் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா அறிக்கை ஒன்றினை வெளியிட்டு அதில் பணியில் ஈடுபட்டு இருக்கும் அதிகாரிகளுக்கு நாம் இயல்பு நிலையை நெருங்கிவிட்டோம் என்றும், முழு இயல்பு நிலையை அடைந்துவிடுவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தலைமைச் செயலாளர் அறிக்கை வருமாறு:-

அன்பார்ந்த கண்காணிப்பு அதிகாரிகள் / மூத்த அதிகாரிகள் / மாவட்ட ஆட்சியர்கள் / உள்ளாட்சி அதிகாரிகள் / காவல்துறை, தீயணைப்புத்துறை, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் ஏனைய துறைகளின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களே,

இந்த இடர்மிகு கால கட்டத்தில் நீங்களும் உங்களுடைய குழுவினரும் மேற்கொண்டு வரும் சிறப்பான பணியை நான் பாராட்டுகிறேன். பின்வரும் கருத்துக்களை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்:

1. பாதிக்கப்பட்ட பகுதிகளிலும், நகரின் ஏனைய பகுதிகளிலும் சாலைகள்/ தெருக்கள் மற்றும் திறந்த வெளிகளை போர்க்கால அடிப்படையில் தூய்மைப் படுத்த வேண்டும். தூய்மைப் படுத்திய பின்னர், பிளீச்சிங் பவுடரை தூவ வேண்டும்.

2. பூச்சிக்கொல்லி தெளித்தல், நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

3. இதுவரை வெள்ளம் வடியாமலுள்ள ஒவ்வொரு தெருவையும் பட்டியலிட்டு, நீரை வெளியேற்றுவதற்கான திட்டத்தை வகுக்கவும். நேற்று மாலைக்குள் அனைத்து தெருக்களிலும் நீரையகற்றி இயல்பு நிலையை மீட்டெடுக்க வேண்டும்.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துடன் ஒருங்கிணைந்து மின்சாரம் தடைபட்ட இடங்கள் / தெருக்களைக் கண்டறிந்து, மீதமுள்ள பகுதிகளில் மின்சாரம் வழங்குவதை உறுதிசெய்ய வேண்டும்.

5. இலை தழைகள் மற்றும் முறிந்து விழுந்த மரங்கள் அகற்றப்பட வேண்டும்.

6. மேலும், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று மேலாண்மை தொடர்பாக, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல்பாடுகளை கண்காணித்து ஒருங்கிணைத்தல். குடிநீர் விநியோக நிலையங்கள் மற்றும் கழிவுநீரகற்று நிலையங்களை கணக்கெடுத்து, அவற்றின் செயல்பாடுகளை ஆய்வு செய்யவும். சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியத்துடன் இணைந்து செயல்படுவதுடன், கூடுதல் பணியாக கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்பை நீக்கும் ஜெட் ரோடிங் இயந்திரங்கள், அதிக திறன் கொண்ட உறிஞ்சி இயந்திரங்கள் மற்றும் கழிவுநீரகற்றும் கொள்கலன் ஊர்திகளை (sewerage Tankers) ஏனைய இடங்களிலிருந்து வரவழைத்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் உரியவாறு பயன்படுத்த வேண்டும்.

7. ஏனைய மாவட்டங்களிலிருந்து பெறப்படும் நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு முறையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் விநியோகிக்கப்பட வேண்டும்.

8. பால் விநியோகம் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்களின் இருப்பினைக் கணக்கிடுங்கள். யாதொரு வணிகரும் நிர்ணயிக்கப்பட்ட உயரளவு விற்பனை விலையைக் (MRP) காட்டிலும் கூடுதல் விலையில் பொருட்களை விற்பனை செய்வதில்லை என்பதை உறுதி செய்யவும். நிர்ணயிக்கப்பட்ட உயரளவு விற்பனை விலையைக் (MRP) காட்டிலும் அதிக விலை வைத்து பொருட்களை விற்பனை செய்யும் வணிகர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும்.

9. பொதுமக்களின் நலன் கருதி, தோட்டக்கலை மற்றும் கூட்டுறவு துறை 150 நடமாடும் காய்கறி கடைகளை திறந்துள்ளது. காய்கறிகளுடன் சேர்த்து பாலையும் அவர்கள் விற்பனை செய்வார்கள். தேவையுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளில் இவை கிடைப்பதற்கான வழிகளை உறுதி செய்யவும்.

10. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மருத்துவ முகாம்களின் செயல்பாட்டினை கண்காணிக்கவும்,

11. பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் வரும் திங்கட்கிழமை முதல் வழக்கம் போல் திறக்கப்படும். எனவே, பள்ளி மற்றும் கல்லூரி வளாகங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். பள்ளி வளாகத்தில் முறிந்து விழுந்த மரங்களும், மரக்கிளைகளும் அகற்றப்பட வேண்டும்.

12. அனைத்து பொதுகழிப்பறைகளும், சமுதாய கழிப்பறைகளும் சுகாதாரமான நிலையில் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

13. தெருவிளக்குகள் சரியாக வேலை செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

14. பாதிக்கப்பட்ட மக்களின் இன்னல்களை / துயரங்களை தணிப்பதற்கு நாம் பணியாற்றி வருகிறோம். எனவே, தயவு கூர்ந்து அதிகாரிகளையும் பணியாளர்களை யும் ஊக்கப்படுத்துங்கள், அவர்களை பொதுமக்களிடம் கனிவுடனும், பொறுமையுடனும் நடந்து கொள்ளுமாறும், வாக்குவாதத்தை / மோதலை தவிர்க்குமாறும் அறிவுறுத்துங்கள். நமது அலுவலர்களும் பணியாளர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலையிலும், அவர்கள் இரவு பகலாக தங்களது கடமைகளை நிறைவேற்றி வருவதை நாம் மனதார பாராட்டுகிறோம்.

15. அரசின் செயல்பாடுகளும் மீட்பு முயற்சிகளும் அனைவரும் அறியும் வகையில் இருக்க வேண்டும். எனவே மீட்பு, நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

நாம் இயல்பு நிலையை நெருங்கிவிட்டோம், முழு இயல்பு நிலையை அடைந்து விடுவோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



நடுஹட்டியில் நீர்த்தேக்கத் தொட்டியை மக்கள் பயன்பாட்டுக்கு அமைச்சர் கா.ராமச்சந்திரன் திறந்து வைத்தார்.

# இந்தியா கூட்டணி ; இந்தியாவை திராவிடப் பண்பாட்டு நாடாக்க வேண்டும்!!

**நா**ன்கு மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. தெலங்கானாவில் ஆளுகின்ற பாரதிய ராஷ்டிரிய சமிதியை தோற்கடித்து காங்கிரஸ் ஆட்சியை பிடித்துள்ளது. மற்ற மூன்று வட மாநிலங்களான மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்திஸ்கர் ஆகியவற்றில் பா.ஜ.க. வென்றுள்ளது. இது பா.ஜ.க.விற்கு பெரும் வெற்றியாகவும், காங்கிரஸிற்கு பெரும் சரிவாகவும் பார்க்கப்படுகிறது.



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் இந்த மாநிலங்களின் பங்கு என்ன? பா.ஜ.க. வெற்றிக்கு அவை உத்திரவாதமளிக்குமா என்பதெல்லாம் விவாதிக்கப் படுகின்றன. மத்தியப் பிரதேசத்தின் மக்கள் தொகை ஏழேகால் கோடி. மக்களவை இருக்கைகள் 29. ராஜஸ்தான் மக்கள் தொகை ஆறே முக்கால் கோடி. மக்களவை இருக்கைகள் 25. சத்திஸ்கர் மக்கள் தொகை இரண்டரை கோடி. மக்களவை இருக்கைகள் 11. தெலங்கானாவின் மக்கள் தொகை மூன்றரை கோடி. மக்களவை இருக்கைகள் 17. சேர்த்துச் சொன்னால் மொத்தம் 65 மக்களவை இருக்கைகள் கொண்ட வட மாநிலங்களில் பாஜக வெற்றி பெற்றுள்ளது. 17 மக்களவை இருக்கைகள் கொண்ட தெலங்கானாவில் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது.

ஏற்கனவே குஜராத், உத்திரப்பிரதேசம், அஸ்ஸாம் ஆகிய மூன்று பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் 120 மக்களவை தொகுதிகள் உள்ளன. ஹரியானா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் கூட்டணி ஆட்சியில் பா.ஜ.க. இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில், இந்த மூன்று பெரிய மாநிலங்களிலும் வென்றதால் பா.ஜ.க. மக்களவையில் பெரும்பான்மை தொகுதிகளை வெல்வதற்கு சாத்தியங்கள் அதிகரிப்பதாக கூறலாம். சற்றேறக்குறைய 250 மக்களவை தொகுதிகள் கொண்ட மாநிலங்களில் பா.ஜ.க. தனியாகவோ, கூட்டணியிலோ ஆட்சி செய்கிறது எனலாம். ஆனால் தென் மாநிலங்கள் எதிலும் பா.ஜ.க. ஆட்சியில் இல்லை என்பதுடன், தெலங்கானாவில் பி.ஆர்.எஸ்சிற்கு எதிரான அதிருப்தி அலையை தங்களுக்கு சாதகமாக பாஜகவால் பயன்படுத்த முடியவில்லை. காங்கிரஸ் அங்கே வென்றுள்ளது.



மேற்கு வங்கம், பீகார், பஞ்சாப், டெல்லி, உத்திராகண்ட், ஜார்கண்ட், ஒரிசா ஆகிய முக்கிய மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சி செய்யவில்லை. மகாராஷ்டிராவில் மிகப்பெரிய அரசியல் குழப்பத்தை அரங்கேற்றியே ஆட்சியில் பா.ஜ.க. ஒட்டிக்கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகள் இரண்டை பிளந்து அதில் குளிர் காய்கிறது. நீதிமன்றத்தில் வழக்குகள் உள்ளன. நீதிமன்றம் என்ன சொன்னாலும், மக்கள் மன்றம் என்ன கூறப்போகிறது என்பதே முக்கியம். பாஜக ஆட்சி செய்யும் மாநிலங்களில் எல்லாம் மக்களவை தேர்தலில் அது பெருவாரியான தொகுதிகளை கைப்பற்றும் என்பது உத்திரவாதமில்லை. உ.பி, ம.பி, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் மாநில தேர்தலில் ஒரு கட்சிக்கும், மக்களவைத் தேர்தலில் மற்ற கட்சிக்கும் வாக்களிப்பதைப் பார்த்துள்ளோம். மேலும் ராஜஸ்தான், சத்திஸ்கர், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் கணிசமான வாக்குகளை பெற்றுள்ளது. கணிசமான தொகுதிகளையும் வென்றுள்ளது. வலுவான கட்சியாகவே தேர்தல் களத்தில் நின்றுள்ளது.



எனவே 2024 மக்களவை தேர்தல் களம் நிச்சயம் கடும் போட்டிக்கான களமாகவே உள்ளது எனலாம். இந்தியா கூட்டணி தங்கள் தரப்பை மக்களிடம் எடுத்துச் செல்வதில் முனைப்புடன் இயங்கினால் வெற்றி நிச்சயம். பா.ஜ.க. எந்த விதத்திலும் அசைக்க முடியாத பலத்துடன் மக்கள் மன்றத்தில் விளங்கவில்லை. பா.ஜ.க. அதிகாரங்களை ஒன்றிய அரசில் குவித்துக்கொள்ளும் பாசிச முனைப்புடன் இருக்கலாம். ஆனால் மக்களின் ஆதரவைக் குவிப்பதில் அது நிச்சயம் வெற்றி பெறவில்லை. எல்லா மாநிலங்களிலுமே அதற்கு கணிசமான எதிர்ப்பு உள்ளது. அதிக வாக்குகள் எண்ணிக்கை அடிப்படையில் தான் வெல்கிறதே தவிர மக்களின் ஏகோபித்த ஆதரவால் இல்லை. இந்துத்துவமோ, மோடி அலையோ அதற்கு தானாக வெற்றியை பெற்று தரும் என்று கருத வாய்ப்பே இல்லை. மாநிலத்திற்கு மாநிலம் கடுமையாகப் போராடியே அது மக்களவை தேர்தலில் வெல்ல முடியும். மாநிலங்களின் தனித்துவம் தேர்தல் வெற்றி தோல்விக்கான காரணங்களை விவா திப்பது, அலசுவது, ஆராய்வது என்பது சமூகத்திலும், ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் மிகப் பரவலாக நடக்கிறது. அது இயல்பானது தான். ஆனால் இந்த விவாதங்களில், அலசல்களில் பரவலாக காணக்கூடிய பலவீனம் அவரவர் முன்னிலைப் படுத்தும் அம்சத்தை ஒற்றை காரணமாகவோ, முக்கிய காரணமாகவோ, பொதுக் காரணமாகவோ முன்வைப்பது தான். எல்லா மாநிலங் களுக்கும் பொதுவான காரணங்கள் என்று எதுவும் கிடையாது என்றே சொல்லலாம். மத்தியப்பிரதேசத்தில் மோடி அலை வீசியதென்றால், தெலங்கானாவில் ஏன் வீசவில்லை? தலை நகர் டெல்லியிலேயே வீசவில்லையே?


**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*




**இந்துத்துவத்திற்கு ஆதரவு பெருகிவிட்டது என்றால் அது ஏன் உத்திரப் பிரதேசத்தைக் கடந்து பீகாருக்குள் நுழைய முடியவில்லை? வங்காளிகள் எல்லாம் இந்துக்கள் இல்லையா? ஒடியாவில் இந்துக்கள் இல்லையா? அங்கேதானே பூரி ஜெகன்னாதர் கோயில் இருக்கிறது? ஒவ்வொரு மாநில அரசியலும் அந்த மாநில அளவிலேயே தீர்மானிக்கப்படுகிறது. அதையும் கடந்து மாநி லத்திற்குள் உள்ள பல்வேறு பிரதேசங்கள் அடிப்படையிலும், ஏன் தொகுதி அடிப்படையிலும் கூட தீர்மானிக்கப்படுகிறது.**



எனவே மத்தியப் பிரதேசத்தில் காங்கிரசின் தோல்விக்கான காரணங்கள் வேறு; அது சிவராஜ் சிங் சௌஹானின் பா.ஜ.க. அரசு பெண்களுக்கான மாதாந்திர உரிமைத்தொகையை(தமிழ்நாட்டுபெயர்)வழங்கியதாகக் கூட இருக்கலாம். ராஜஸ்தானில் 2% வாக்கு வித்தியாசத்தில் அசோக் சிங் கெலாட் தோற்றதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அவற்றில் எந்த காரணம் பிரதான காரணம் என்பதை கண்டறிவதற்கு பெரிய அளவில் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். காரணங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுவது மட்டுமல்லாமல், தருணத்திற்கு தருணம் மாறுபடுவது மாகும். வாக்குப் பதிவுக்கு முந்தைய நாள் நிகழ்ந்த ஒரு சம்பவம் கூட கணிசமான வாக்காளர்களின் தேர்வை பாதிக்கலாம்.

**சென்ற 2019 நாடாளுமன்ற தேர்தலின் போது புல்வாமா என்ற இடத்தில் நிகழ்ந்த தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு பா.ஜ.க. அரசின் கவனமின்மையே காரணம் என்று பிரசாரம் செய்வதற்குப் பதிலாக, பா.ஜ.க. அதனை தேசபக்தி முழக்கமாக மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்பட்டதை பார்த்தோம். அது தேர்தலில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் என்றே தோன்றுகிறது. பல ஆய்வாளர்களும் அப்படியே கூறுகிறார்கள். இது போன்ற தாற்காலிக நிகழ்வுகள் ஏற்படுத்தும் தாக்கங்கள், உள்ளூர், பிரதேச நிலவரங்கள் என பல்வேறு காரணங்களின் தொகுப்பாகத்தான் தேர்தல் வெற்றி தோல்விகள் அமைகின்றன. அதில் கருத்தியல், பிரசாரம், தலைவர்களின் ஆளுமை, வேட்பாளர்களின் ஆளுமை என பல்வேறு அம்சங்களும் இடம் பெறத்தான் செய்கின்றன.**

**எல்லாவற்றையும் நாம் கவனமாக பரிசீலிக்கும்போது காங்கிரஸ் இன்னமும் பல வட மாநிலங்களில் வலுவாகத்தான் இருக்கிறது என்பதை கருத்தில் கொள்ளத் தான் வேண்டும்.**

**வட மாநிலங்களும், தென் மாநிலங்களும் தெலுங்கானாவில் காங்கிரஸ் வெற்றி பெற்றதன் காரணமாக வட மாநிலங்களுக்கும், தென் மாநிலங்களுக்கும் சாராம்சமான பல வேறுபாடுகள் கற்பிக்கப்படுகின்றன. இதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். “இந்து, இந்தி, இந்தியா” என்ற புகழ் பெற்ற வலதுசாரி முழக்கத்தில் இந்தி என்ற மொழி சார்ந்த அம்சத்தில் தான் வடக்கிற்கும், தெற்கிற்கும் முக்கிய வேறுபாடு நிலவுகிறது. ஏனெனில் வட இந்தியாவில் சமஸ்கிருத மயமான இந்தி மொழி கட்டமைக்கப் பட்டதற்கும், இந்து அடையாளம் கட்டமைக்கப்பட்டதற்குமான வரலாற்று இணையுறவு முக்கியமானது. இந்துஸ்தானியிலிருந்து உருது மொழியை பிரித்தெடுத்து அதை முஸ்லீம்கள் மொழியாகக் கட்டமைத்து, சமஸ்கிருதவயப்பட்ட இந்தியை நாகரி எழுத்தில் எழுதி அதை தேவ நாகரி என்று அழைத்து அதன் மூலம் இந்து அடையாளத்தையும் மொழி சார்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உருவாக்கினர்.** ஆனால் தலித் மக்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், முன்னேறிய வகுப்பினர் ஆகியோருக்கு இடையேயுள்ள பாகுபாடும், ஏற்றத்தாழ்வும் வட இந்திய சமூகங்களில் வலுவாக உள்ளதுடன், தொடர்ந்து அரசியல் அணியாக்கத்திற்கும் வலு சேர்க்கின்றன. அதனால் வட இந்தியாவில் “இந்திஇந்து” அரசியல் மந்திர் அரசியலாகவும், சமூக நீதி அரசியல் மண்டல் அரசியலாகவும் எண்பதுகளின் இறுதியில் பரிணமித்தது. இந்த அரசியல் முர ண்பாட்டிற்கு இன்னமும் உயிர் இருக்கிறது.






அதனால் இந்தியா கூட்டணியின் சமூக நீதி அரசியலில் வடக்கும், தெற்கும் ஒன்றிணைந்து பயணப்படும் சாத்தியங்கள் கணிசமாக உள்ளன. தமிழ்நாட்டு முதல்வர் சென்ற வாரம் வி.பி.சிங் அவர்களின் திருவுருவச் சிலையை சென்னையில் திறந்து வைத்ததும், அதற்கு சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவை அழைத்ததும் குறிப்பிடத் தக்கது. மொழி அடிப்படையில் நாம் தென்னிந்தியாவை ‘திராவிடம்’ என அழைத்தாலும், பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர், தலித்பகுஜன் அரசியல் என்ற அளவில் மொத்த இந்தியாவையுமே திராவிட பண்பாடாக கருதவும் இடம் இருக்கிறது. அதனால் வடக்கு தெற்கு வேறுபாட்டை ஒற்றைப் பரிமாணத்தில் சாராம்சப்படுத்த தேவையில்லை. இந்துத்துவர்களின் கற்பனை தொலைக்காட்சி விவாதத்தில் பா.ஜ.க. ஆதரவாளர் ஒருவர் வட மாநிலங்களில் பா.ஜ.க. வெல்வதற்குக் காரணம் முகலாயர் ஆட்சியில் இந்துக்களெல்லாம் கொடுமைப் படுத்தப்பட்டதுதான் என்றார்.

இது முற்றிலும் வரலாற்றுத் திரிபு, புனைவு என்பது வரலாற்றைப் படித்தவர்களுக்குத் தெரியும். அக்பரின் அவையில் தோடர்மால், பீர்பால் ஆகியோர் வகித்த பங்கு வெகுமக்களின் பேச்சு வழக்கிலேயே இடம் பெற்றதுதான். அப்படியே இருந்தாலும் கூட, காங்கிரஸ் கட்சி நேருவின் காலத்தில் வென்றபோதும், இந்திரா காந்தி காலத்தில் வென்ற போதும், ஏன் 1984ஆம் ஆண்டு ராஜீவ் காந்திக்கு பேரலையான ஆதரவை அளித்தபோதும் முகலாயர் காலத்தை வட இந்தியாவில் மறந்து போய்விட்டனரா என்ன? அல்லது முலாயம் சிங்கும், அகிலேஷ் யாதவும் உத்திரப் பிரதேசத்தில் வென்ற போது மறந்து போய்விட்டார்களா? தென்னிந்தியாவை முகலாயர்கள் ஆளவில்லை என்றாலும், எத்தனையோ முஸ்லீம் சுல்தான்களும், நவாப்களும் ஆளவில்லையா என்ன? அதற்காக தென்னகத்து மக்களெல்லாம் பாஜகவை ஆதரித்து விடுவார்களா?

திப்பு சுல்தானைப் பற்றி எத்தனையோ பொய்களை புனைந்தார்களே? அதனால் கர்நாடகாவில் வென்று விட்டார்களா? இது போன்ற அர்த்தமற்ற காரணங்களை அறிந்தோ, அறியாமலோ பலரும் கூறுகின்றனர்.

முஸ்லீம்களுக்கு எதிரான அடையாளமாக இந்துக்களை கட்டமைப்பது என்பது காலனீய கால கட்டத்தில் பத்தொன்பதாம்நூற்றாண்டில் துவங்கிய நடைமுறை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த இந்து அடையாளவாத தேசியத்தை மறுத்து இந்து - முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்தியதால்தான் காந்தியார் கொல்லப்பட்டார். ஆனால் மக்கள் இன்றும் காந்தியாரை மிகுந்த மரியாதையுடன் வணங்குகின்றனர். காந்தியாரின் நினைவை இந்திய மக்களிடமிருந்து அகற்ற முடியாது. இந்தியா கூட்டணியின் சமூக நீதி அரசியல் ஒட்டுமொத்த இந்தியாவையும் திராவிடப் பண்பாட்டின் அடையாளமாக்க வேண்டும். பார்ப்பன - பனியா கருத்தியல் மேலாதிக்கத்தைத் தகர்க்க வேண்டும்.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்



புதுக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் ஆ.செந்தில் தந்தை மிசா ஆறுமுகம் அவர்களின் 15வது நினைவு நாளில் அவரது உருவப்படத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், எம்.எம்.அப்துல்லா எம்.பி. ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், சக்தி ராமசாமி, கே.நைனா முகம்மது, எம்.எம்.பாலு, பா.ரெங்கராஜன் ஆகியோர் உள்ளனர்.



மேல்மலையனூர் ஒன்றியத்தில் 83.45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய மருத்துவக் கட்டிடம் கட்டுவதற்கும், மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில்குளம் புனரமைக்கும் பணிக்கும் நரிக்குறவர் பெண்கள், திருநங்கைகளை முன்னிலைப்படுத்தி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன், உதவி ஆணையர் ஜீவானந்தம், அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்நேரு, பெருங்குடி மண்டலம், வார்டு–190, துலுக்கானத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகரில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு நிவாரணப் பொருட்களை நேற்று முன்தினம் (08.12.2023) வழங்கினார். இந்நிகழ்வில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர் திருமதி வி.ஆர்.சுப்புலட்சுமி, தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், மாமன்ற உறுப்பினர் பி.சிவப்பிரகாசம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெருங்குடி – ஆலந்தூர் – வளசரவாக்கம் மண்டலங்களில்

# புயல் பாதிப்பு பகுதிகளில் நிவாரணப் பணிகள் - நல உதவிகள் வழங்கும் பணி!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

சென்னை, டிச.10-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என் நேரு பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி, ஆலந்தூர், மற்றும் வளசரவாக்கம் மண்டலங்களில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் களப்பணி நடவடிக்கைகள், பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உணவு விநியோகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலின் காரணமாக பெருங்குடி மண்டலத்திற்குட்பட்ட வார்டு190, துலுக்காத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகர், ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட மணப்பாக்கம் ரிவர்வியூ காலனி, வார்டு 156க்குட்பட்ட திருவள்ளுவர் நகர், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட வார்டு151, சுப்பிரமணி சாமி நகர், வார்டு152, அம்பேத்கர் சாலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் மற்றும் மீட்பு உள்ளிட்ட களப்பணி நடவடிக்கைகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், துலுக்காத்தம்மன் கோயில் தெரு மற்றும் சாய்பாலாஜி நகரில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட 1000 நபர்களுக்கு பாய், பிஸ்கெட் மற்றும் ரொட்டி பாக்கெட்டுகள், குடிநீர் பாட்டில்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்களையும் வழங்கினார்.

இந்த ஆய்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 65 நிவாரண முகாம்களில் 14,268 நபர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதித்த பகுதிகளில் வாகனங்களின் மூலம் இதுவரை (08.12.2023) 47,79,222 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சி சார்பில் 1,04,290 ரொட்டி பாக்கெட்டுகள், 7,01,941 குடிநீர் பாட்டில்கள், 8,47,633 பிஸ்கெட் பாக்கெட்டுகள், 51,733 பால் பவுடர் பாக்கெட்டுகள், 14,574 பால் பாக்கெட்டுகள், 61,380 கி.கி. அரிசி மற்றும் 1,739 கி. பருப்பு உள்ளிட்ட உணவுப் பொருட்கள் மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 1,512 மரங்கள் விழுந்துள்ளன. அவற்றில் 1,303 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதமுள்ள 209 மரங்களை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 22 சுரங்கப் பாதைகளும் தற்பொழுது மழைநீர்த்தேக்கமின்றி போக்குவரத்திற்கு பயன்பாட்டில் உள்ளது. மேலும், பொதுமக்களுக்கு மழைக்கால நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில், 01.12.2023 முதல் 07.12.2023 வரை நடமாடும் மருத்துவ முகாம்கள் மற்றும் நிலையான மருத்துவ முகாம்கள் என 1,060 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 77,663 நபர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (08.12.2023) 623 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1,162 மோட்டார் பம்புகள் மழைநீர் வெளியேற்றுவதற்காக தயார்நிலையில் உள்ளது. மழைநீர் தேங்கியிருந்த 363 இடங்களில் மோட்டார் பம்புகள் மூலம் 306 இடங்களில் தேங்கியுள்ள மழைநீர் வெளியேற்றப்பட்டு விட்டது. மீதமுள்ள 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 488 பேருந்து தட சாலைகளில் 67 இடங்களில் மட்டும் மழைநீர்த்தேக்கம் காணப்பட்டது. இவற்றில் 57 இடங்களில் மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 இடங்களில் மழைநீர் வெளியேற்றும் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கனமழை மற்றும் மிக்ஜாம் புயலினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள், வெளிமாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மூலம் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் வாரியம் மூலமாக மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நாள்தோறும் குடிநீரானது லாரிகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 7.12.2023 அன்று 4,227 நடைகளில் 444 லாரிகள் மூலமும், நேற்று முன்தினம் (8.12.2023) இது வரை 4284 நடைகளில் 474 லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் மூலம் 333 தெருக்களில் உள்ள கழிவுநீர் மற்றும் மழைநீர்த் தேக்கமானது 160 கழிவுநீர் வாகனங்கள் மூலம் 2,072 நடை களில் அகற்றப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 7.12.2023 அன்று 324 தெருக்களிலும், நேற்று முன்தினம் (8.12.2023) 526 தெருக்களிலும் தேங்கியிருந்த கழிவுநீர் அகற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கா.கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் டாக்டர் ஜெ.ராதா கிருஷ்ணன், சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திருமதி வி.ஆர்.சுப்புலட்சுமி, இ.சுந்தரவல்லி, கமல் கிஷோர், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித், மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வெ.ராஜன், மாமன்ற உறுப்பினர் பி. சிவப்பிரகாசம், ச. சங்கர் கணேஷ், திருமதி ச. பாரதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘மிக்ஜாம்’ புயல்: தொழில்நிறுவனங்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள்

# முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்கிட வங்கி விவரங்கள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.10-

**‘மிக்ஜாம்’ புயலினால் ஏற்பட்ட பாதிப்பினை சீர்செய்திடவும், நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், தொழில் நிறுவனங்கள், தன்னார்வலர்கள், பொதுமக்கள் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நிதி வழங்கிட வங்கி விவரங்களை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

இது தொடர்பான அரசின் செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாட்டில் ‘மிக்ஜாம்’ புயல் காரணமாக ஏற்பட்ட வரலாறு காணாத பெருமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த சேதங்கள் ஏற்பட்டன. இந்த இயற்கைப் பேரிடரால் ஏறத்தாழ ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பேரிடர் பாதிப்பிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கு தங்களின் பங்களிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், தங்கள் ஒரு மாத ஊதியத்தை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கிடவுள்ளார்கள்.

இந்தச் சூழ்நிலையில், நல்லுள்ளம் கொண்ட பல்வேறு தொழில் நிறுவனங்களும், தன்னார்வ அமைப்புகளும், பொது மக்களும் இந்த மாபெரும் பணிக்கு தங்களது பங்களிப்பினையும் வழங்கிட விருப்பம் தெரிவித்து, அரசைத் தொடர்பு கொண்டு வருகிறார்கள். எனவே, பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைத்திடவும், புதிய வாழ்வாதாரங்களை மீள உருவாக்கிடவும் தொழில் நிறுவனங்களைச் சார்ந்தவர்களும், தன்னார்வலர்களும், பொதுமக்களும் முதலமைச்சர் பொது நிவாரண நிதி வாயிலாக, மிக்ஜாம் மீட்புப் பணிகளுக்குத் தங்களின் பங்களிப்பை வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னதாக வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்வாறு அளிக்கப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டம் பிரிவு 80(G)ன்கீழ் 100 விழுக்காடு வரிவிலக்கு உண்டு. வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRIs) அல்லது வெளிநாட்டு மக்களிடமிருந்து பெறப்படும் நிவாரணத்திற்கு அயல் நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்று) சட்டம் 2010, பிரிவு 50ன்கீழ் விலக்களிக்கப்படும்.

**இந்த நன்கொடைகளை மின்னணு முறை மூலம் பின்வருமாறு வழங்கலாம்.**

(1)வங்கி இணைய சேவை அல்லது கடன் அட்டை / பற்று அட்டையின் மூலமாக கீழ்க்கண்ட இணையதளம் வழியாகச் செலுத்தி பற்றுச் சீட்டினைப் (Receipt) பெற்றுக்கொள்ளலாம்.

https://cmprf.tn.gov.in

(2)Electronic Clearing System (ECS) / RTGS / NEFT மூலமாக கீழ்க்காணும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கு நேரடியாக அனுப்பலாம்.

வங்கி பெயர் - இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கிளை -தலைமைச் செயலகம், சென்னை 600 009, சேமிப்புக் கணக்கு எண் -117201000000070, IFS Code–IOBA0001172, MICRCode–600020061, CMPRF PAN–AAAGC0038F

(3)UPI - VPA ID: tncmprf@iob மற்றும் PhonePe, Google Pay, PayTM, Amazon Pay, Mobikwik போன்ற பல்வேறு செயலிகள்.

(4)மேற்கண்ட ECS மூலமாக நிதி அனுப்புவோர் உரிய அலுவலகப் பற்றுச்சீட்டினைப் பெற ஏதுவாக கீழ்க்கண்ட தகவல்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பெயர், செலுத்தும் தொகை, வங்கி மற்றும் கிளை-செலுத்தப்பட்ட தேதி, நிதி அனுப்பியதற்கான எண்-தங்களது முழுமையான முகவரி, இமெயில் விவரம், தொலைபேசி /அலைபேசி எண்.

(5)நிவாரண நிதி வழங்கும் வெளிநாடுவாழ் மக்கள் கீழ்க்கண்ட SWIFT Code-ஐப் பின்பற்றிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

IOBAINBB001 Indian Overseas Bank, Central Office, Chennai.

(6)மின்னணு மூலம் பரிவர்த்தனை செய்ய இயலாதவர்கள் குறுக்குக் கோடிட்ட காசோலை அல்லது வங்கி வரைவோலை மூலமாக, “முதலமைச்சரின் பொது நிவாரண நிதி (Chief Minister’s Public Relief Fund)” என்ற பெயரில், கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்:

அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்,முதலமைச்சர் பொது நிவாரண நிதி,நிதித்துறை, தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், சென்னை - 600 009, தமிழ்நாடு, இந்தியா.

மின்னஞ்சல் முகவரி: jscmprf@tn.gov.in

மேற்கூறிய முதலமைச்சரின்பொது நிவாரண நிதிக்கு அளிக்கப்படும் நன்கொடைகள் தவிர, நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு (Corporate Social Respon sibility)-ன்கீழ் பேரிடர் நிவாரணத்திற்காக நிதியுதவி வழங்கும் நிறு வனங்கள், மாநிலப் பேரிடர் மேலாண்மை அமைப்பின் கீழ்காணும் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

வங்கி பெயர் -இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கிளை-தலைமைச் செயலகம், சென்னை 600 009,சேமிப்புக் கணக்கு எண்-117201000017908,IFSCCode–IOBA0001172.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



டிசம்பர் 24 தி.மு.க. இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டில் திரளாக பங்கேற்பது குறித்து காரைக்கால் மாநிலக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 8.12.2023 அன்று மாலை 6:00 மணி அளவில் காரைக்கால் காமராஜர் சாலையில் அமைந்துள்ள யூனிகான் பிளாசா அரங்கில் மாநிலக் கழக அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜிம் எம்.எல்.ஏ., தலைமையிலும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.நாக தியாகராஜன் எம்.எல்.ஏ., முன்னிலையில் இளைஞர் அணியின் அமைப்பாளர் முஹம்மது ரிஃபாஸ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் மாநிலக் கழக நிர்வாகிகள் தொகுதி செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள் பங்கேற்றனர். மேலும் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் என திரளாக மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மாம்பலம் ஆ.சந்திரசேகர் தலைமையில்

# நூல்கள் வெளியீட்டு விழா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிடுகிறார்!

செஞ்சி, டிச. 10-

திருவண்ணாமலை நந்தினி பதிப்பகம் குறிஞ்சி வாசகர் வட்டம் சார்பில் இன்று (10.12.2023) காலை 10 மணியளவில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பாராட்டு விழா, நூல்கள் வெளியீட்டு விழா, பாரதி பிறந்த தின விழா என முப்பெரும் விழா நடைபெறுகிறது.

அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர்கள் சங்க அவை முன்னவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் தலைமை வகிக்கிறார்.

ந.சண்முகம் வரவேற்கிறார். நே.சிற்றரசு, பெ.சு. விஜயகுமார், ஆர்.பூபதி, மெக்தியார் அலி, கோ.தமிழரசன், துரை திருநாவுக்கரசு முன்னிலை வகிக்கின்றனர்.

நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் திருமதி. கே.அல்லியின் இரண்டு நூல்களை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வெளியிட்டு பேசுகிறார்.

வே.காளிதாஸ், கா. கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் பங்கேற்கிறார்கள்.

பூவழகன் நன்றி கூறுகிறார்.



அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 67வது நினைவு தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன் தலைமையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினார். புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை. முத்துராஜா, ஆ.செந்தில், அரு.வீரமணி, கே.ஆர்.என்.போஸ், செ.அசோக்பாண்டியன், எஸ். எஸ்.கருப்பையன், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, என். சாத்தையா, அ.ரெத்தினம், இராம.செல்வராஜ், எம்.எம்.பாலு, தமிழ்ச்செல்வன், வி.என்.எம். பாலமுருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### கொடநாடு : நேரில் ஆஜராவதில் இருந்து எடப்பாடி பழனிசாமி

# விலக்களிக்கக் கூறிடும் காரணம் ஏற்கும்படி இல்லை!

## சென்னை உயர்நீதிமன்றம் கருத்து!

சென்னை, டிச. 10–

ஜெயலலிதாவின் கொடநாடு பங்களா கொலை, கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி வீடியோ வெளியிட்ட டெல்லியைச் சேர்ந்த பத்திரிகையாளர் மேத்யூ சாமுவேல், வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள சயான் மற்றும் வாளையார் மனோஜ் ஆகியோருக்கு எதிராக 2019ஆம் ஆண்டு எடப்பாடி பழனிசாமி, ஒரு கோடியே 10 லட்ச ரூபாய் மான நஷ்ட ஈடு கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

வழக்கில் சாட்சியங்களை பதிவு செய்வதற்காக மாஸ்டர் நீதி மன்றத்தில் ஆஜராக எடப்பாடி பழனிசாமிக்கு விலக்கு அளித்து தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார். இதை எதிர்த்து மேத்யூ சாமுவேல் மேல்முறையீடு செய்துள்ளார். இதன்மீதான விசாரணை சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் முன்பு நடைபெற்றது.

அப்போது, எடப்பாடி பழனிசாமி தரப்பை நோக்கி, எதனடிப்படையில் ஆஜராவதில் இருந்து விலக்குக் கோருகிறீர்கள்? என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். எனினும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும், நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்குக் கோர எடப்பாடி பழனிசாமி தெரிவிக்கும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளும் படியாக இல்லை என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இ.வி. ரங்கப்பன்

### டிசம்பர் 10 (2001)



**இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**ஈரோடு ஒன்றியத்திற்குட்பட்ட ஆர்.என்.புதூர் கிளைக் கழகச் செயலாளராகப் பணியாற்றத் தொடங்கி, 1970 முதல் மூன்று முறை ஈரோடு ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 1998ல் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**அத்துடன் கோவை–பெரியார் மாவட்ட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைப் பொதுச்செயலாளராகவும் – ஈரோடு நிலவள வங்கித் தலைவராகவும், ஈரோடு மாவட்ட கூட்டுறவு அச்சகத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# ‘மிக்ஜாம்’ பெரும் புயல் : பாதிப்பிலிருந்து மீண்ட மக்கள்!

# நிவாரணப் பணிகளை முனைப்புடன் நிறைவேற்றும் கழக அரசு!



செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் முடிச்சூர் பகுதியில் கனமழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடிச்சூர் சி.எஸ்.ஐ ஆலயத்தில் உள்ள வெள்ள நிவாரண முகாமில் உணவு, அரிசி, பாய், போர்வை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உணவு பாதுகாப்பு துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், ஊரக வளர்ச்சி ஊராட்சி துறை செயலாளர் செந்தில்குமார், ஊரக வளர்ச்சித்துறை இயக்குனர் பொன்னையா, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசு செயலாளர் சமயமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



மிக்ஜாம் புயல் காரணமாக, தொடர்ந்து பெய்த கனமழையினால் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தது. முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , பாதிப்புக்கு வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரனைப் பகுதிகளுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை தொடர்ந்து 4வது நாளாக (8.12.2023 நேற்று முன்தினம் வழங்கினார்.



வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் உள்ள நரிக்குறவர் மக்களுக்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் வேளாண்மை மற்றும் உழவர் நலன் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் 1000 நபர்களுக்கு படுக்கை ,போர்வை, பால், ரொட்டி, இறைச்சி உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினர் .அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ஷேக் அப்துல்லா ரகுமான், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன். பிரகாஷ், ஆவடி மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, பகுதிச் செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன், ஆவடி மாநகர காவல் துணை ஆணையர் அய்மன் ஜமால், உள்பட பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (08.12.2023) மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நெருப்பு மேடு, செட்டித்தோட்டம், ஜோதி அம்மாள் நகர் (சைதாப்பேட்டை ஆடுதொட்டி அருகில்) ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு அரிசி, பெட் சீட், பால், பிஸ்கேட், பிரட் ஆகிய பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மகேஷ்குமார், மண்டலக்குழுத் தலைவர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நேற்றுமுன்தினம் (08.12.2023) சென்னை, ராஜா அண்ணாமலை மன்றத்தில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு வழங்கினார். உடன் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, துறைமுகம் பகுதி கழக செயலாளர்கள் எஸ். ராஜசேகர், எஸ். முரளி,மாவட்ட தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ஜெகதீஷ், வட்டக் கழகச் செயலாளர்கள் பிரபாகரன், சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், வையாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள, தாழ்வான பகுதியில் குடியிருந்த இருளர் குடியிருப்பை சார்ந்த நபர்களுக்கு நிவாரண பொருட்களை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று முன்தினம் வழங்கினார். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் முனைவர் பி.செந்தில்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.க.சங்கீதா, வாலாஜாபாத் ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே.தேவேந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதிக்குட்பட்ட பூண்டி ஒன்றியம் கச்சூர் ஊராட்சியில் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட 800 குடும்பங்களுக்கு உணவு மற்றும் போர்வை அத்தியாவசியமான மளிகைப் பொருட்களை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மதுரை பி.மூர்த்தி ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ உள்ளிட்ட ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர் ஒன்றியம் பழவேற்காடு ஊராட்சியில் மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட 3000 குடும்பங்களுக்கு உணவு மற்றும் போர்வை அத்தியாவசியமான மளிகைப் பொருட்களை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மதுரை பி.மூர்த்தி, மீன்வளம் மீனவர் நலத்துறை (ம) கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஜெயக்குமார், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர், திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் கேவிஜி உமா மகேஸ்வரி, உள்ளிட்ட ஒன்றிய செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநில ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## சென்னை பெருமழை :

# மறைக்கப்படும் உண்மைகளும்... மறக்க முடியா கொடுமைகளும்...



அரை நூற்றாண்டு காலத்தில் இல்லாத அளவிற்கு பெய்த பெருமழையால் சென்னை மக்கள் சந்தித்துள்ள இடர்பாடுகள் அனைவரும் அறிந்ததே.

இதுபோன்றதொரு இக்கட்டான சூழலை பயன்படுத்தி இந்த அரசின் மீது சேற்றை வாரி வீசும் முயற்சிகளை பா.ஜ.க. உடன் கை கோர்த்து திட்டமிட்டு செய்து வருகிறது அ.தி.மு.க.

இந்த சமயத்தில் நாட்டு மக்களுக்கு ஒரு பத்திரிக்கையாளனாக சில உண்மைகளைச் சொல்வதே அறம். அந்த வகையில், தற்போது பெய்த பெருமழைக்கு பெருமளவு உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டிருக்கக் கூடும் ஆனால் இந்த அரசு செய்த சிறப்பான பணிகளால் சென்னை ஒரு மிகப்பெரிய பேரழிவில் இருந்து தப்பித்துள்ளது என்பதே உண்மை. பெருவாரியான ஊடகங்களும், எதிர்க்கட்சிகளும் திட்டமிட்டு மறைக்கும் அந்த உண்மையையும், 2015 ம் ஆண்டு மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா இருந்த போது நடைபெற்ற கொடுமைகளையும் மக்கள் மன்றத்தில் வைப்பதே இந்த கட்டுரையின் நோக்கம்.

2015 டிசம்பர் 1 ம் தேதி மழை பெய்யத் தொடங்கிய போது, சென்னை நகரவாசிகள் அடுத்த நாள் காலை ஒரு பேரிழப்பை சந்திப்போம் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். இரவு சென்னை மாநகரமே உறங்கிக் கொண்டிருந்தபோது, எந்தவித அக்கறையும், கவலையும் இன்றி அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவும் உறங்கிக் கொண்டிருந்தார்.

மழையின் காரணமாக நிரம்பி உடையும் தருவாயை எட்டுகிறது செம்பரம்பாக்கம் ஏரி. செய்வதறியாது திகைத்த அதிகாரிகள் நள்ளிரவில் செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்து விடுகின்றனர். குழந்தைகள். முதியவர்கள் கர்ப்பிணித் தாய்மார்கள் என்று பலரும் நள்ளிரவில் ஒரு தீவுக்குள் சிக்கியது போன்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். என்ன நடக்கிறது என்பதை புரிந்து கொள்ளக்கூட அவர்களுக்கு நேரமில்லை. பின்னிரவில் உயிரைக் காப்பாற்றினால் போதும் என்று அனைவரும் மொட்டை மாடியில் தஞ்சம் புகுந்தனர்.

சென்னை நகரமே கடல்போல் மாறியது. சைதாப்பேட்டை பாலத்தின் மீது தண்ணீர் சென்றதைப் பார்த்த மக்கள் மிரண்டு போயினர். பிணங்கள் சாலைகளில் வெள்ளத்தில் அடித்து வரப்பட்டன.

புதிய தலைமுறை, ஜெயா தொலைக்காட்சி உள்ளிட்டவற்றுக்குள் தண்ணீர் புகுந்ததால் அவற்றின் ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது.

ஊழியர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதே பெரும் பாடானது.

அன்றைய மேயர், சைதை துரைசாமியிடம் ஆங்கில ஊடகத்தின் செய்தியாளர் இது குறித்து கேள்வி எழுப்பும் போது, அவர் கேமராவை ஆப் செய்யச் சொல்லி தப்பி ஓடினார்.

கோட்டூர்புரம் பாலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் மொட்டை மாடிகளில் தஞ்சம் புகுந்திருந்த மக்களைப் பற்றி செய்தி சேகரிக்கச் சென்ற நியூஸ் 7 தமிழ் செய்தியாளர் அன்றைய அமைச்சர் வளர்மதியிடம் கேள்வி கேட்டு மைக்கை நீட்ட அவர் ஓட்டமெடுத்தார். விடாமல் பின்னால் சென்று அவர் கேள்வி எழுப்பியும் பதில் மட்டும் கிடைக்கவேயில்லை.

உலகம் முழுவதும் இருந்து உதவிக்கரங்கள் சென்னையை நோக்கி நீண்டன.

மக்கள் ஏராளமான நிவாரணப் பொருட்களை அனுப்பத் தொடங்கினர்.

மக்கள் அனுப்பும் நிவாரணப் பொருட்களை வழி மறித்து அவற்றில் அதிமுக ஸ்டிக்கர் ஒட்டும் பணியைச் செய்த அன்றைய ஜெயலலிதா அரசு.

சுமார் 300 பேர் மாண்டு போன அந்த பெருமழை வெள்ளத்தின் கொடூரத்தில் இருந்த சென்னை இயல்பு நிலைக்குத் திரும்ப 3 வாரங்களுக்கு மேல் ஆயிற்று.

மின்சாரம் அனைத்துப் பகுதிகளுக்கும் செல்ல 2 வாரங்களுக்கு மேல் ஆயிற்று.

சுமூகமான போக்குவரத்து ஏற்பட பல நாட்கள் ஆயின.

இத்தனைக் கொடுமைகளையும் மக்கள் மறந்துவிட்டார்கள் என்று எண்ணி ஒரு கூட்டம் துணிந்து தற்போது பொய்களைச் சொல்லி வருகிறது.

2015 ஐ போல் இல்லை தற்போதைய நிலை.

2015 ல் பருவ காலம் முழுமைக்கும் சேர்த்து பெய்த மழையின் அளவு : 340 மி.மீ.

2023 ல் ஒரே நாளில் பெய்த மழை : 343 மி.மீ.

அந்த வகையில் 2015 ஐ விட மழையின் அளவும் பன்மடங்கு அதிகம்.

அதே சமயம் பாதிப்பு என்பது மிக மிகக் குறைவு.

இம்முறை மழைக்கு பலியானோரின் எண்ணிக்கை 10க்கும் குறைவு.

பொருட் சேதமும் பெருமளவு தவிர்க்கப்பட்டது.

5 ஆம் தேதி காலை மழை நின்றதுமே மின் விநியோகம் சீராகத் தொடங்கியது.

படிப்படியாக மழை நீர் வடிந்த இடங்களுக்கு மின் விநியோகத்தை சீர் செய்யும் பணி தொடங்கியது. அன்று மாலைக்குள் பெருவாரியான பகுதிகளில் மின் விநியோகம் தடையின்றி கொடுக்கப்பட்டது.

இந்த அரசு பொறுப்பேற்று இரண்டரை ஆண்டுகளில் இது நடைபெற்றிருக்கிறது.

அதிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு பொறுப்பேற்றபோது கொரோனா உச்சத்தில் இருந்தது.

கொரோனா பேரிடரில் இருந்து மக்களை காக்கும் பெரும் பணி இந்த அரசுக்கு முதன்மையாக இருந்தது. அதைத் தொடர்ந்து மழை நீர் வடிகால் பணிகளில் இந்த அரசு கவனம் செலுத்த தொடங்கியது.

மிக வேகமாக பணிகள் நடைபெற்றபோதும், 100 விழுக்காடு அந்தப் பணிகளை முடிப்பதற்கான கால அவகாசம் இந்த அரசுக்கு இல்லை என்பதை மறந்து, அல்லது மறைத்து இந்த அரசின் மீது வன்மத்தைக் கக்குகின்றன எதிர்க்கட்சிகள்.

2015 ல் ஓடி ஒளிந்த அமைச்சர்களைப் போல் ஓடி ஒளியாமல் களத்தில் நின்றனர் தி.மு.க. அமைச்சர்கள்.

2015 ல் வெளியே வரவே மறுத்த ஜெயலலிதாவைப் போல் இன்றி களத்தில் மக்களுடன் நின்றார் முதல்வர்.

சமீபத்தில் டெல்லியில் ஜி20 நாடுகளின் மாநாடு நடைபெற்றது. அதற்காக ஒன்றிய அரசு அமைத்த வளாகம் முழுவதும் சிறு மழை ஒன்றிற்கே தாங்காமல் தீவு போல் மாறியதை செய்திகளில் பார்த்தோம்.

கால் நூற்றாண்டு காலமாய் பா.ஜ.க. ஆளும் குஜராத் கடந்த சில மாதங்களுக்கு முன் பெய்த சிறு மழைக்கே மூச்சுத் திணறியதையும் இந்த நாடு பார்த்தது.

பல்லாயிரம் கோடி செலவில் கட்டப்பட்ட பாராளுமன்றக் கட்டிடம் மழைக்கு ஒழுகுகிறது என்ற செய்தியையும் நாம் பார்த்தோம்.

இப்படி மக்களைப் பற்றி எந்த கவலையும் கொள்ளாமல் இதுபோல் செயல்படும் பா.ஜ.க.வும் அ.தி.மு.க.வும் தான் மக்களுக்காக களத்தில் நிற்கும் தி.மு.க. வை கேள்வி கேட்கிறது.

குறிப்பாக 4000 கோடி என்பதைச் சுற்றி இவர்கள் பரப்பும் விசமச் செய்தி மிக ஆபத்தானது.

ஆம் தி.மு.க. விற்கு எதிராக இப்போதல்ல எப்போதுமே ஆரியம் இதுபோல் ஏதேனும் ஒரு எண்ணைச் சொல்லி அதை வைத்து கற்பனைக் கதைகளை கட்டவிழ்த்து அதன் மூலம் தி.மு.க. வின் சாதனைகளை மறைக்க சதி செய்யும்.

அப்படித்தான் 2ஜி விவகாரத்திலும் ஒரு எண்ணைச் சால்லி அதை தி.மு.க.விற்கு எதிராக பயன்படுத்தி தேர்தல் வெற்றியும் பெற்றனர் ஆனால் என்ன நடந்தது, தி.மு.க.விற்கு எதிரான குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்பது நிரூபணம் ஆகியது..

2ஜி யை விட குறைவான விலைக்கு 4ஜி,5ஜி அலைக்கற்றைகள் ஏலம் விடப்பட்டன.

தி.மு.க.வை நோக்கி தொடர் கேள்விகளை எழுப்பிய எந்த பத்திரிக்கையும் அது குறித்து பேச மறுத்தது.

இப்போதும் கூட ரூ.4000 கோடி திட்ட மதிப்பில் என்னென்ன பணிகள் நடைபெற்றுள்ளன. இன்னும் என்னென்ன பணிகள் நடைபெற வேண்டியுள்ளது என்று அமைச்சர் கே.என்.நேரு தெளிவுபடுத்தியுள்ளார்.

ஒரு பத்திரிக்கையாளனாக என் கேள்வி. இந்த 4000 கோடி குறித்து திமுக விளக்கிவிட்டது. அ.தி.மு.க. ஆட்சியில் 8000 கோடி ரூபாய் செலவிடப்பட்டது என்றும் அதன் பலனாக இனி சென்னையில் தண்ணீரே தேங்காது என்றும் எடப்பாடியும், எஸ்.பி.வேலுமணியும் சொன்னார்களே. அது பொய்யா என்பதை ஊடகங்கள் கேட்குமா?

இரண்டரை ஆண்டுகளில் தி.மு.க. அரசு செய்திருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனைகளை எதிர்காள்ள திராணியின்றியே இந்த பேரிடரை பயன்படுத்தி பொய்ச் செய்திகளைப் பரப்புகின்றன எதிர்க்கட்சிகள்.

ஆனால், தமிழக மக்கள் எப்போதும் தெளிவானவர்கள். அவர்களுக்கு வீட்டிலேயே இருந்த ஜெயலலிதாவுக்கும், ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூட்டை தொலைக்காட்சியில் பார்த்து தெரிந்து கொண்ட எடப்பாடி பழனிசாமிக்கும், களத்தில் நிற்கும் ஸ்டாலினுக்கும் வேறுபாடு தெரியும். மக்களே ஜனநாயகத்தில் இறுதி எஜமானர்கள்.

**தமிழ் கேள்வி**
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்



கரூரில் நடைபெற்ற மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்தில், சேலம் கழக இளைஞரணி மாநில மாநாட்டு நிதியாக கரூர் மாவட்டக் கழகம் சார்பில் மாநில இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் 1 கோடியே 12 இலட்சம் ரூபாயினை மாவட்ட நிர்வாகிகள் வழங்கினர்.

## சேலம் இளைஞர் அணி மாநாட்டுக்கு

# கரூர் மாவட்டக் கழகம் ரூ.1 கோடியே 12 லட்சம் நிதி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் வழங்கப்பட்டது!

கரூர். டிச.10-

சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டு நிதியாக ஒரு கோடியே 12 லட்சம் ரூபாய் கரூர் மாவட்ட கழகத்தின் சார்பில் கரூரில் நடைபெற்ற பிரம்மாண்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டத்தில் வழங்கப்பட்டது.

மாநில உரிமை மீட்பு முழக்கமாக கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை வெற்றி மாநாடாக்கிடும் வகையில் கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் கரூர் மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. கழக இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். முன்னதாக மாலை கரூர் மாவட்டம் வருகைதந்து சிறிது நேர ஓய்வுக்கு பின்னர் விடுதியில் இருந்து கரூர் திருவள்ளூர் மைதானத்திற்கு வந்தார்.

அப்போது வழிநெடுக கழகத்தினர் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர். மைதானத்தில் மேடைக்கு வரும் வழியில் செவ்விளநீர். வாழைமரம் தோரணம் கட்டப்பட்டிருந்தது. மேளதாளம் வாண வேடிக்கையுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கரூர் மாவட்டக் கழக செயலாளரும் தமிழ்நாடு அமைச்சருமான வி. செந்தில்பாலாஜி ஆலோசனை படி சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இளைஞரணி செயல்வீரர் கூட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்றினார்.

சேலம் இளைஞர் அணி மாநில மாநாட்டு நிதியாக கரூர் மாவட்ட கழகம் சார்பில் ஒரு கோடி ரூபாய் நிதி உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் அளிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகிகள் இதனை வழங்கி அவருக்கு மாலை வெள்ளி வீரவாள் மற்றும் நினைவு பரிசு வழங்கினார். மேலும் கரூர் மாவட்ட இளைஞரணி சார்பில் ரூ.12 லட்சம் மாநாட்டு நிதி அளிக்கப்பட்டது.

செய்தி மக்கள் தொடர்பு துறை அமைச்சர் வெள்ள கோவில் மு .பெ சாமிநாதன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரகாஷ், உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா,

குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், குளித்தலை சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பரணி இ.ஏ.கார்த்திகேயன், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் நாமக்கல் ராணி, அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார், கரூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் பனப்பட்டி கே.தினகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ்பாபு, பொருளாளர் பி.வி.பரத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, என்.செல்வராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள் வி. கருப்பண்ணன், என்.எஸ். ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே.டி.ராஜ்கண்ணு, பி.பி. சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ. குமார், கரூர் மாநகர கழகச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி செயலாளர் ஆர்.எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி பொறுப்பாளர் ஆர்.ஜோதி பாசு, கரூர் மத்திய பகுதி பொறுப்பாளர் வி.ஜி.எஸ். குமார், அவைத் தலைவர் கே.வி. தங்கவேல், துணைச் செயலாளர்கள் எம். பாண்டியன், கே.எஸ்.அறிவின்ஸ், எம்.நிசாமுகமது, பொருளாளர் அங்கு நா. பசுபதி, பிரதிநிதிகள் கே. இளமுருகு, கே எம் பாலு, பி பழனிவேல், ஆர் வெங்கடேஷ், கே.ஆர்.சுந்தர்ராஜன், பி.சுப்பிரமணியம், எ. ஆரோக்கிய ஜெயபால், பசுவை ஜீவா பி.சண்முகம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி.கே. ராஜா, ஆத்தூர் பாபு, யுவராஜ், கனக ராஜ், ஜீவி அருண்,

அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம். எஸ்.மணியன், கிழக்கு ஒன்றிய செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் சி.கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எல்.கரிகாலன், குளித்தலை கிழக்கு ஒன்றிய செயலாளர் அ.சந்திரன், குளித்தலை மேற்கு ஒன்றிய பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் இ.ராமர் (முன்னாள் எம்.எல்.ஏ.), தோகைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜி.அண்ணாதுரை, பள்ளப்பட்டி நகர பொறுப்பாளர் அவாசிம் ராஜா, புகழூர் நகர செயலாளர் ஏ.குணசேகரன், பேரூர் கழக செயலாளர்கள் புஞ்சை தோட்டக்குறிச்சி க.முரளிராஜா, புலியூர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் ஆர்.மோகன்ராஜ், மருதூர் இ.ரவீந்திரன், நங்கவரம் எம்.முத்து (எ) சுப்பிரமணி, ஆகியோர் பங்கேற்றனர்.

## இரயில்களில்

# பார்சல்களை உடனடியாக அனுப்ப நடவடிக்கை தேவை!

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கவனஈர்ப்புத் தீர்மானம்!

புதுடெல்லி, டிச. 10-

இரயிலின் வழித்தடத்தின் இடையில் உள்ள இரயில் நிலையங்களில் இணையத்திலோ, நேரிலோ முன்பதிவு செய்யப்படும் பார்சல்களை பதிவு செய்யப்பட்ட தேதியின் அடிப்படையில் அவற்றைக் கண்காணிக்கவும், உடனடியாக அனுப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

இதுகுறித்து அவர் பேசியதாவது:-

அதில் “80%க்கும் அதிகமான பயணிகளுடன் ஆன்லைனில் முன்பதிவு செய்யப்படும் உலகின் நான்காவது பெரிய ரயில்வேயான இந்தியன் இரயில்வே தற்போது சரக்கு சேவைகளில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. அதாவது இரயிலின் வழித்தடத்தில் இடையில் உள்ள இரயில் நிலையங்களில் பார்சல் சேவைகள் சரிவர கிடைப்பதில்லை.

ஒவ்வொரு இரயிலிலும் உள்ள பார்சல் பெட்டி பெரும்பாலும் இரயில் புறப்படும் முதல் நிலையத்திலேயே நிரப்பப்படுகிறது. இந்த வகையான முன்னுரிமை மூலம் இடையில் உள்ள நிலையங்களில் இருந்து வரும் பயணிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆன்லைனிலோ, நேரிலோ அவர்களால் முன்பதிவு செய்யப்பட்ட பார்சல்கள் பதிவு செய்யப்பட்ட இரயில் நிலையத்திலேயே வாரக்கணக்கில் அல்லது மாதக்கணக்கில் காத்திருக்கும் நிலை ஏற்படுகிறது.



எடுத்துக்காட்டாக, ஒரு நபர் சில அவசியத்தின் காரணமாக வேறு இடத்திற்குச் செல்ல வேண்டிய நிலையில் அவர் தனது பைக்கை இரயில்வே பார்சல் சர்வீஸ் மூலம் அனுப்பும்போது அது அந்த வழித்தடத்தில் இடையில் உள்ள இரயில் நிலையமாக இருப்பின் ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்திற்கும் மேல் முன்பதிவு செய்யப்பட்ட அந்த இரயில் நிலையத்திலேயே காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்நிலையில் அது நிச்சயம் சேதமடைய வாய்ப்புள்ளது. எனவே பயணிகள் மிகுந்த பொருள் இழப்புக்கு ஆளாக வேண்டியுள்ளது.

இந்தியாவில் உள்ள பல பயணிகளுக்கு மலிவு விலை போக்குவரத்தான இரயில்வே இன்னமும் ஒரு விருப்பமான போக்குவரத்தாக உள்ளது. எனவே இரயில் வழித்தடத்தின் இடையில் உள்ள இரயில் நிலையங்களில் பார்சல்கள் அதிக நேரம் காத்திருக்காமல் இருக்க முன்பதிவு தேதியின் அடிப்படையில் பார்சல்களை கண்காணிக்கவும், அனுப்பவும் சாத்தியமான வழிகளில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய ஒன்றிய இரயில்வே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.”

இவ்வாறு எம்.எம்.அப்துல்லா பேசினார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் தி.மு.க.வின் இளைஞர் அணி மாநாட்டுத் திடலில் இருந்து சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் ஆத்தூர் ஸ்ரீ ராம் ஏற்பாட்டில் ரூபாய் 5 லட்சம் மதிப்புள்ள நிவாரணப் பொருட்களை சென்னை மிக்ஜாம் புயல் நிவாரணத்திற்காக லாரி மூலம் சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் இரா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர் அனுப்பி வைத்தனர்.

திருமதி சோனியா காந்தியின் ஆழ்ந்த தொலைநோக்கு அனுபவச் செல்வம்

# இந்தியாவைப் பாதுகாக்கும் ஒளிவிளக்காகத் தொடர்ந்து அமைந்திடட்டும்!

## பிறந்தநாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 10-**

**நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில், "திருமதி சோனியா காந்தியின் ஆழ்ந்த தொலை நோக்கு அனுபவச் செல்வம், இந்தியாவைப் பாதுகாக்கும் ஒளிவிளக்காகத் தொடர்ந்து அமைந்திடட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:-



அர்ப்பணிப்புமிக்க பொது வாழ்க்கைக்கு அடையாளமாக விளங்கும் நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்களுக்கு எனது பிறந்தநாள் நல்வாழ்த்துகள். அவர் நீண்டகாலம் நல்ல உடல் நலத்துடன் திகழ விழைகிறேன்.

திருமதி சோனியாகாந்தி அவர்களின் ஆழ்ந்த தொலைநோக்கும் அனுபவச் செல்வமும் எதேச்சாதிகார சக்திகளிடம் இருந்து இந்தியாவைப் பாதுகாக்கும் நம் ஒன்றிணைந்த முயற்சிக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகத் தொடர்ந்து அமைந்திடட்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வேளச்சேரி - மடிப்பாக்கம் - பள்ளிக்கரணை பகுதிகளில்

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

சென்னை, டிச. 10-

மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னையில் கனமழை பெய்து பாதிக்கப்பட்ட வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணை ஆகிய பகுதி மக்களுக்கு நிவாரணப் பொருட்களை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்.

மிக்ஜாம் புயல் காரணமாக, தொடர்ந்து பெய்த கனமழையினால் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்கள் பெரிதும் பாதிப்படைந்தன. முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, பாதிப்புக்குள்ளான வேளச்சேரி, மடிப்பாக்கம், பள்ளிக்கரணைப் பகுதிகளுக்குச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை தொடர்ந்து 4வது நாளாக நேற்று முன்தினமும் (8.12.2023) வழங்கினார்.

சென்னையில், வேளச்சேரி, அம்பேத்கர் நகர், வார்டு எண்.175, மடிப்பாக்கம், பாலாஜி நகர், பள்ளிக்கரணை, சாய்பாலாஜி நகர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு, அமைச்சர் அவர்கள் நேரடியாகச் சென்று, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, 5500 அரிசி மூட்டைகள் (5 கிலோ பேக்), 11600 பால்பவுடர் பாக்கெட்டுகள், 14000 வாட்டர் பாட்டில்கள், 70000 பிஸ்கெட் பாக்கெட்டுகள், 12000 பிரட் பாக்கெட்டுகள், 17000 சுவீட் பன்னு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

மேலும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் படர்ந்துள்ள ஆகாய தாமரை செடிகளை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, அதனை ஜே.சி.பி. இயந்திரங்கள் மூலம் அகற்றி, மழைநீர் விரைவாக வடிய, நடவடிக்கை மேற்கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்திரமோகன், நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி. சத்தியமூர்த்தி மற்றும் நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர்களும், அலுவலர்களும் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளான ஜூன் 3 அன்று

# சிறந்த இதழியலாளருக்கு ‘கலைஞர் எழுதுகோல் விருது!’

## கூடுதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன! அரசு அறிவிப்பு!

சென்னை, டிச. 10-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 அன்று - அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், ஒரு சிறந்த இதழியலாளருக்கு ‘கலைஞர் எழுதுகோல் விருது’ எனும் விருது வழங்கிடும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இவ்விருதுக்கு கூடுதலாக விண்ணப்பங்களை வரவேற்று செய்தி மக்கள் தொடர்புத் துறை அறிவிப்பு வெளியிட்டது.

இது தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு:-

ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த தினமான ஜூன் 3 ஆம் நாளன்று, ஒரு சிறந்த இதழியலாளருக்கு “கலைஞர் எழுதுகோல் விருது” வழங்கி கௌரவிக்க ஆணை வெளியிடப்பட்டு, 2022 ஆம் ஆண்டிற்கான “கலைஞர் எழுதுகோல் விருது” வழங்கவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பெண்மையைப் போற்றுகின்ற வகையில் சிறப்பினமாக இவ்வாண்டு மட்டும் ஒரு பெண் இதழியலாளருக்கு கூடுதலாக ஒரு “கலைஞர் எழுதுகோல் விருது” வழங்கி கௌரவிக்க அரசு முடிவு செய்து நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. இந்நிலையில், மேற்காணும் விருதுகளுக்கான கூடுதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. கலைஞர் எழுதுகோல் விருதானது, ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகையுடன், பாராட்டுச் சான்றிதழும் அடங்கும். விருதிற் கான தகுதிகள் பின்வருமாறு:

- விண்ணப்பதாரர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
- தமிழ் இதழியல் துறையில் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளாக தொடர்ந்து பணிபுரிந்திருக்க வேண்டும்.
- பத்திரிகைப் பணியை முழுநேரப் பணியாகக் கொண்டிருக்க வேண்டும்
- இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பங்காற்றியிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரரின் எழுத்துகள் பொதுமக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் நேரடியாகவோ, மற்றொருவர் பரிந்துரையின் அடிப்படையிலோ பணிபுரியும் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரிலோ விண்ணப்பங்களை அனுப்பலாம் .
- விண்ணப்பதாரர்களில் ஒருவரே விருதாளராக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்.
- குழுவின் முடிவே இறுதியானது.

3. “கலைஞர் எழுதுகோல் விருது 2022” மற்றும் பெண்மையைப் போற்றுகின்ற வகையில் சிறப்பின மாக கூடுதலாக ஒரு பெண் இதழியலாளருக்கு “கலைஞர் எழுதுகோல் விருது” ஆகியவற்றிற்கான தகுதியான விண்ணப்பங்கள், விரிவான தன் விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச்செயலகம், சென்னை - 600 009 என்ற முகவரிக்கு 15.12.2023க்குள்ளாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அச்செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஃபார்முலா 4 கார் பந்தயம்

# காலவரையறையின்றி ஒத்திவைப்பு!

சென்னை, டிச. 10-

ஃபார்முலா 4 கார் பந்தயம் கால வரையறையின்றி ஒத்திவைக்கப் படுகிறது.

இதுகுறித்த அரசின் செய்திக் குறிப்பு வருமாறு:-

மிக்ஜாம் புயல் பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளதன் விளைவாக சென்னையில் நடைபெற இருந்த ஃபார்முலா 4 கார் பந்தயம் கால வரையறையின்றி எந்தத் தேதியும் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

# இயற்கைப் பேரிடரிலிருந்து மக்களை மீட்போம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, டிச. 10–**

**இயற்கைப் பேரிடரிலிருந்து மக்களை மீட்போம் என அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

*அவரது வேண்டுகோள் வருமாறு:-*

மிக்ஜாம் புயல் - கனமழை ஏற்படுத்திய வரலாறு காணாத பேரிடரால் சென்னை - காஞ்சிபுரம் - திருவள்ளூர் - செங்கல்பட்டு மாவட்டங்களில் ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.



**அமைச்சர்கள் நிவாரண உதவிகளை வழங்குகிறார்கள்!**

முதலமைச்சர் அவர்கள் - மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் - அரசு அதிகாரிகள் - கழக நிர்வாகிகள் - இளைஞர் அணியினர் - கழக உடன்பிறப்புகள் என அனைவரும் களத்தில் இறங்கி மக்களுக்கான நிவாரண உதவிகளைச் செய்து வருகின்றனர்.

கடந்த டிசம்பர் 3-ஆம் தேதி நள்ளிரவு முதல் தற்போது வரை நானும் தொடர்ந்து களத்தில் நின்று வெள்ள பாதிப்பு தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு - மக்களுக்கான நிவாரண உதவிகளை வழங்கி வருகிறேன்.

குறை கூறுவதற்காக மட்டுமே தலையை வெளியே காட்டும் எதிர்க்கட்சிகளுக்கு மத்தியில், மக்களுடன் நிற்பதும் -அவர்களைப் பேரிடரிலிருந்து மீட்பதுமே நமது தலையாயப் பொறுப்பு. ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளுக்குச் செவிமடுத்தும் - வன்மத்துடன் வருகின்ற விமர்சனங்களை எதிர்கொண்டும் மக்களுக்கான உதவிகளை, நம் கழகத்தினர் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

**மக்களுடன் நின்று பணியாற்றும் கழகத்தினர்!**

இந்த மாபெரும் மீட்பு - நிவாரணப் பணிகளின் காரணத்தால், சேலத்தில் வருகிற 17-ஆம் தேதி நடைபெறவிருந்த ‘மாநில உரிமை மீட்பு’ முழக்கமான நம் இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டை, டிசம்பர் 24-ஆம் தேதி நடத்துவது, என்று தலைமைக் கழகம் அறிவித்திருக்கிறது.

**பாசிஸ்ட்டுகளிடமிருந்து நாட்டை மீட்க சேலம் மாநாடு!**

இந்த அறிவிப்புக்கேற்ப இளைஞர் அணி மாநில மாநாட்டுக்கான பணிகளை ஒருங்கிணைக்க மாவட்டச் செயலாளர்கள் - இளைஞர் அணியின் மாநில - மாவட்ட - ஒன்றிய - நகர- பகுதி - பேரூர் நிர்வாகிகளைக் கேட்டுக் கொள்கிறோம்.

இயற்கைப் பேரிடரிலிருந்து நம் மக்களை இப்போது மீட்போம் -10 ஆண்டு காலமாக பாசிஸ்ட்டுகள் ஏற்படுத்தி வரும் செயற்கைப் பேரிடரிலிருந்து நாட்டை மீட்க, டிசம்பர் 24 அன்று சேலத்தில் கூடுவோம்; இளைஞர் அணி மாநாட்டை வெற்றி பெறச் செய்வோம்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு! அடையாறு நீர் கடக்கும் பகுதியில் 60 மீட்டர் அகலப்படுத்தியதால்

# திருமுடிவாக்கம் தொழில் பூங்காவில் பாதிப்பில்லை!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், டிச.10-

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், திருமுடிவாக்கம் தொழில் பூங்காவில் மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் வெள்ள நீர் சூழ்ந்த தொழிற்சாலைகளை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், திருமுடிவாக்கம் தொழில் பூங்காவில் மிக்ஜாம் புயல் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் வெள்ள நீர் சூழ்ந்த தொழிற்சாலைகளை நேற்று முன்தினம் (08.12.2023) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் சார்பில், சிறு நிறுவனங்கள் பாதிக்கப்பட கூடாது என்பதற்காக, திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் சுமார் 500க்கு மேற்பட்ட நிறுவனங்கள் இயங்கி வருகிறது. மிக்ஜாம் புயல் காரணமாக கடும் மழை மற்றும் செம்பரபாக்கம் ஏரியிலிருந்து திறந்து விடப்பட்ட உபரிநீர் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் வெள்ளநீர் சூழ்ந்த நிறுவனங்களில் உடனடி நடவடிக்கையாக வெள்ளநீர் வெளியேற்றப் பட்டது. இன்று திருமுடிவாக்கம் சிட்கோ பகுதியில் ஆய்வு செய்த பொழுது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக செம்பரம்பாக்கம் கலங்கலிருந்து வருகிற தண்ணீர் அடையாற்றை கடக்கின்ற பகுதி எல்லாம் அகலப்படுத்தியதன் காரணமாக 20 மீட்டர் அகலம் இருந்த அந்த செம்பரம்பாக்கம் தண்ணீர் வெளியே அடையார் கடக்கும் பகுதியை 60 மீட்டராக அகலப்படுத்தியதால் திருமுடிவாக்கம் பகுதியில் இருக்கிற சிட்கோ தொழிற்பேட்டை பாதிக்கப்படாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்று இங்கே ஆய்வு செய்தபோது திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள நிர்வாகிகள் அனைவரும் எந்தவித பாதிப்பும் இல்லாமல் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாக எங்களிடம் தெரிவித்தார்கள். மேலும் இதேபோல் அம்பத்தூர் தொழில்பேட்டையில் வடிகால் அகலப்படுத்தி சீர் செய்திடும் பணி விரைவில் செயல்படுத்தப்படும் என தெரிவித்தார்.

இவ் ஆய்வின் போது தொழில் வணிகத்துறை ஆணையர் எல். நிர்மல்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வபெருந்தகை, மாவட்ட வருவாய் அலுவலர் செ. வெங்கடேஷ், திருப்பெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் ஐ.சரவணக்கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் இருந்தனர்.

சென்னை புறநகர்ப் பகுதியில்

# திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் நிவாரணப் பொருட்கள் !

## பூண்டி கே.கலைவாணன் வழங்கினார்

திருவாரூர், டிச.10-

சென்னையில் மிக்ஜாம் புயலில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் அரிசி மற்றும் சமையல் பொருட்களை மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் வழங்கினார்.

சமீபத்தில் மிக்ஜாம் புயலின் தாக்கத்தால் சென்னை உள்ளிட்ட பெரும் பகுதிகளில் ஏற்படவிருந்த பெரும் பாதிப்புக்களை தன்னுடைய நிர்வாகத்திறத்தாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாலும் எதிர்கொண்டு மக்களை காத்த திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பணிகள் இந்தியா முழுவதும் பாராட்டப்பட்டு வருகிறது.

எந்த ஆண்டும் இல்லாத வகையில் வரலாறு காணாத மழைப் பொழிவை சந்தித்த சென்னை மழைநீரால் சூழப்பட்டிருந்த நிலையில் பொதுமக்கள் தங்களின் இயல்பு வாழ்க்கையை தொடர்ந்து நடத்திடும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் சென்னை புறநகர் பகுதியான பள்ளிகரணையில் வாழும் மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் 3000 நபர்களுக்கு அரிசி மற்றும் காய்கறி, மளிகைப் பொருட்களை மாவட்டச் செயலாளரும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் 6000 தொகுப்பு பைகளாக வழங்கினார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளை ஏற்று திருவாரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வழங்கப்பட்ட இந்த நிவாரணப் பொருட்களை பெற்றுக்கொண்ட பொதுமக்களும், நிவாரணப் பொருட்களை பொதுமக்களுக்குக் கொண்டு சேர்த்த கானகம் பவுண்டேஷன் அமைப்பினரும், தமிழ்நாடு அரசுக்கும் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணனுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் மிக்ஜாம் புயல் காரணமாக பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், யமுனா நகர், நஷ்ரத்பேட்டை, சென்னீர்குப்பம் ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ள பகுதிகளையும் அவ்வெள்ளநீரை மோட்டார் மூலமாக விரைந்து வெளியேற்றும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மை செயலாளர் பி.செந்தில்குமார், வேளாண்மை துறை சிறப்பு செயலாளர் முனைவர்.பொ.சங்கர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநர் பொன்னையா மாவட்ட ஆட்சியர் டாக்டர்.த.பிரபுசங்கர் திட்ட அலுவலர் என்.ஒ.சுகபுத்திரா, ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், ஒன்றிய குழு பெருந்தலைவர் எம்.ஜெயக்குமார் உள்பட அரசு அதிகாரிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (08.12.2023) உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பொது விநியோகத்திட்ட அங்காடிகளில் இன்றியமையாப் பொருள்கள் விநியோகம் மற்றும் பெட்ரோல், டீசல் விநியோகம் குறித்து உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், டாக்டர் கே. கோபால், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் / ஆணையர் ஹர் சஹாய் மீனா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கலைஞரும் நானும் 48

“பெரியப்பா கலைஞர் அவர்களின் நினைவுகளைப் பேசுவது எனில், என் கண்கள் கலங்கி விடும். ‘பெரியப்பா’ என அன்பாக அழைக்கக்கூடிய அளவுக்குப் பிரியமான அப்பாவாக இருந்தார். அவரை ‘கலைஞர் அப்பா’ என்று சொன்னால்கூட, ‘என்ன பெயரைச் சொல்ற’ என, என் அப்பா நடிகர் திலகம் அவர்கள் திட்டுவார்...” என முத்தமிழறிஞர் கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார் நடிகர் பிரபு.

■ நடிகர் **பிரபு**



## “வழிநடத்திக் கொண்டிருக்கும் பெரியப்பா..!”

“என் சிறுவயது காலத்திலிருந்தே கலைஞரை ‘பெரியப்பா’ என்றுதான் அழைத்து வருகிறேன். அவருக்கும் அப்பாவுக்குமான நட்பும் உறவும், அன்பும் சொல்லில் கொண்டுவரமுடியாதது. அந்த அளவுக்கு காவியமான உறவு அது.

நான் சிறுவயதில் பெங்களூருவில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போதெல்லாம், அப்பாவின் அனைத்துப் படங்களுக்கும் பெரியப்பாதான் வசனம் எழுதுவார் என நினைத்துக் கொண்டிருந்தேன். ஒருமுறை பெரியப்பா கலைஞர் அவர்கள் பெங்களூர் வந்திருந்தபோது, அவர் தங்கியிருந்த ஒட்டலுக்கு சந்திக்கச் சென்றேன்.

### ‘எழுத நீங்க... பேச அவர்...’

அங்கிருந்தவர்கள் என்னை அழைத்துச் சென்று, பெரியப்பா அவர்களிடம் கொண்டு போய் விட்டதும் அவ்வளவு வாஞ்சையுடன் என்னை விசாரித்தார்.

‘இங்க என்ன பண்ற, எப்படி வந்த?’ எனக் கேட்டவரிடம் நான் அங்கு படிக்கும் தகவலைக் கூறினேன். “ஆமாம், என் நண்பன் கணேசனின் மகன்கள் இங்கு படிக்கிறதாகச் சொல்லியிருக்காங்க” என்று கூறியவர், ‘சாப்ட்டியா?’ என்று கேட்டுவிட்டு, உடனே, அந்த ஒட்டலில் இருந்து சாப்பாடு வரவழைத்து, சாப்பிடவும் வைத்தார்.

**அப்பாவும், பெரியப்பாவும் ஓர் இடத்தில் சந்தித்துக் கொள்கிறார்கள் எனில், அந்த இடமே கலகலப்பாகவும், உற்சாகமாகவும் இருக்கும். நகைச்சுவைக்குப் பஞ்சமே இருக்காது.**

அப்போது ‘ஏன் பெரியப்பா இப்போதெல்லாம் அப்பா படங்களுக்கு எழுதுறதில்லை?’ என்று துடுக்குத்தனமான ஒரு கேள்வியையும் அப்போது கேட்டேன். அதற்கு, பெரியப்பா சிரித்துக்கொண்டே, ‘இந்தக் கேள்வியை என் நண்பன், உன் அப்பாவிடமே கேள்’ என்று கூறினார்.

கிளம்பும் நேரத்தில் ‘தென்பாண்டிச் சிங்கம்’ புத்தகத்தை எடுத்து, ‘அன்பு மகனுக்கு பெரியப்பா’ எனக் கையெழுத்திட்டு அளித்துவிட்டு, ‘புத்தகத்தின் பெயரைப் படிப்பா’ என்றார். நான் தமிழ் படிக்கத் தெரியாமல் தடுமாறியதும், ‘என்னப்பா நீ, என் நண்பன்கிட்ட நானூறு பக்கத்துக்கு எழுதிக் கொடுத்தாலும், பேப்பரை பார்க்காமல், உணர்ச்சி பிசகாமல் பேசுவாரேப்பா’ என்றார். ‘எழுத நீங்க இருக்கீங்க, பேச அவர் இருக்கிறார். அதனால், எங்களை ஆங்கிலம் படிக்கட்டும் என இங்கு அனுப்பி இருக்கிறார்’ என சமாளித்தேன். இரண்டு மணி நேரத்துக்கு மேல் என்னோடு பேசிக்கொண்டிருந்து விட்டு, அனுப்பி வைத்தார்.

### தொலைந்து போன கேஸட்

நான் படத்தில் நடிக்க முடிவெடுத்ததும், ‘கோபாலபுரம் போய் பெரியப்பா அவர்களிடம் ஆசி வாங்கிக்கொண்டு வா’ என அப்பா சொன்னார். நான் கோபாலபுரம் சென்று அவரது அறையில் அவரைச் சந்தித்தேன். ‘என்ன படத்தில நடிக்கப் போற, இங்கிலீஷ் படத்திலா, தமிழ்ப் படத்திலா?’ எனக் கேட்டார். ‘தமிழ்ப் படம்தான்பா’ என்றதும், ‘அப்பா பேரைக் காப்பத்தணும்பா’ என வாழ்த்தி அனுப்பினார்.

சில வருடங்களில் 30 படங்கள் நடித்திருந்தேன். அதில் என் அப்பாவுடன் 19 படங்கள் செய்திருந்தேன். அதனால், நான் அப்பாவால் வளர்ந்து வருகிறேன் என பேச்சு வந்தது. அதனால், கொஞ்ச காலம் இடைவெளிவிட்டு, திரும்ப நடிக்கத் தொடங்கினேன்.

அப்போதுதான் பெரியப்பாவின் ‘பாலைவன ரோஜாக்கள்’ படம் கிடைத்தது. அந்தப் படத்தில் அப்பாவின் வசனத்தில் நடிக்க ஆர்வமாக இருந்தேன். சத்யராஜ் நாயகன், நான் துணை நாயகனாக நடிக்கிறேன். ஆனால், எனக்கு வசனங்கள் குறைவாக இருந்தன. படப்பிடிப்புத் தளத்துக்கு வந்த பெரியப்பா அவர்களிடம், ‘எனக்கு பெரிதாக டயலாக் இல்லீங்களேப்பா’ என்றேன். ‘உனக்கு டயலாக் இங்கிலீஷ்ல வேணுமா? தமிழ்ல வேணுமா’ என்றார். ‘அப்பா.... உங்க டயலாக் பேசணும் என ஆசையா இருக்கு’ என்றேன். ‘சரி கவலைப்படாத நான் பண்ணித் தர்றேன்’ என்றார்.

அதற்குப் பிறகு ‘காவலுக்குக் கெட்டிக்காரன்’ படத்தில் நடிக்க அழைப்பு வந்தது. பெரியப்பா டயலாக் எழுதுகிறார். என்னை அழைத்தவர், “நீயும் கேட்டுக்கிட்டே இருக்கே, இந்தப் படத்தில ஓரங்க நாடகம் போன்ற காட்சி, அதில டயலாக் வரும் பேசிடுறியா” என்றார். எனக்குக் கிடைத்த வாய்ப்பாக அதை எதிர்பார்த்திருந்தேன்.

பெரியப்பா அந்த வசனங்களை எழுதி, அவரது குரலிலேயே பதிவுசெய்து அனுப்பினார். அந்த ஒலிநாடாவின் இறுதியில், ‘இந்த வசனத்தை உன் அப்பா கணேசனிடம் எப்படி உச்சரிக்க வேண்டும் எனக் கேட்டுத் தெரிந்துகொள்’ என்றும் பதிவு செய்து அனுப்பினார். அதை ஆர்வத்துடன் வாங்கிய அப்பா, தனது குரலிலேயே அதைப் பதிவு செய்து கொடுத்தார்.

பெரியப்பா கலைஞர் அவர்கள் வசனம் எழுத, அதை என் அப்பா நடிகர் திலகம் பேசுவதைக் கேட்பதுதான் கொடுப்பினை. அவ்வளவு பிரமாதமாக அது இருந்தது. பின்னர், அதை அவரிடம் சொன்னபோது, ‘அந்தக் கேசட்டைக் கொடு, கலைஞர் டி.வி.யில் ஒளிபரப்பச் சொல்றேன்’ எனக் கேட்டார். ஆனால், அந்தக் கேசட் தொலைந்து போயிருந்ததால் மிகவும் வருத்தப்பட்டார்.

திரைத்துறைப் பணிகளைப் பொறுத்தவரை பெரியப்பா அவர்கள் தன்னுடன் பணியாற்றுபவர்களை எந்த அழுத்தத்துக்கும் ஆளாக்கியதில்லை. நண்பர் மகன் என்றோ, மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர் என்றோ எதற்காகவும் அவர் அழுத்தங்களை உருவாக்கமாட்டார். இலகுவாக வேலை செய்ய வைப்பார்.

‘எம்.ஜி.ஆர் விருது’ கொடுத்தபோது, கலைஞர் பெரியப்பா அவர்களைச் சந்தித்தேன். ‘உனக்குப் பிடிச்ச பெரியப்பா விருதா’ என்றவரிடம், ‘நீங்களும் பெரியப்பாதான், உங்கமேலயும் அதே பிரியம்தான்’ என்றேன். ‘சரிப்பா கோபிச்சுகாதப்பா’ என தனது பிரியத்தைக் காட்டுவார். அவர் முதலமைச்சராக இருக்கும்போது அவர் கையால் ‘கலைமாமணி’ விருது வாங்கினேன்.

### ‘முத்தம் கொடுத்தால் அரசியலாகும்’

பெரியப்பா முதலமைச்சராக இருந்தபோது, ஒருநாள் காலையில் சண்முகநாதன் அண்ணன் அவர்கள் போன் செய்து அழைத்தார். ‘சி.எம் அழைக்கிறார், கோபாலபுரம் வாங்க’ என்றதும் நான் சென்றிருந்தேன். என்னை வரவேற்ற பெரியப்பா, “ஏம்பா பிரபு, நேத்து என் நண்பன் திரைப்படத்தைப் பார்த்தேன், இரவெல்லாம் தூக்கம் இல்லை, அதான் உன்னை அழைத்தேன்” என்றார். “அப்பாவை அழைத்து வரட்டுங்களா” எனக் கேட்டேன். “வேண்டாம்பா, அவனுக்கு இப்ப முத்தம் கொடுத்தா அரசியலாகும்ப்பா” எனச் சிரித்தவர், ‘நான் டி.வி.யில கணேசனை தொட்டே முத்தம் கொடுத்துடுவேன்பா’ என்றார். அந்த அளவுக்கு இருவரும் அன்பு, பாசம், நட்பு கொண்டவர்கள்.

அப்பாவும், பெரியப்பாவும் ஓர் இடத்தில் சந்தித்துக் கொள்கிறார்கள் எனில், அந்த இடமே கலகலப்பாகவும், உற்சாகமாகவும் இருக்கும். நகைச்சுவைக்குப் பஞ்சமே இருக்காது. பெரியப்பா அவர்கள் அவரது நண்பனுக்காகக் கடற்கரை சாலையில் சிலை எடுத்தார்கள். அந்த விழா அவ்வளவு நெகிழ்ச்சியான நிகழ்வாக எங்கள் குடும்பத்துக்கு அமைந்தது. தனது நண்பர் கணேசனுக்காக அவர் சிலை வைக்கத் திட்டமிட்ட இடத்தில் அமைக்க முடியவில்லை என்றதும், அவரது தவிப்பை உடனிருந்து பார்த்தேன். அவரது அப்போதைய வருத்தத்தை விவரிக்க வார்த்தைகளே இல்லை. பின்னர் அவர் நினைத்த இடத்திலேயே அவருக்கு சிலை அமைத்து பெருமைப்படுத்தினார். அதற்காக, பெரியப்பா அவர்களுக்கு எங்கள் குடும்பமே நன்றி சொல்லும் இடத்தில் உள்ளோம்.

தமிழ் இருக்கும் வரையிலும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் என உலகமெல்லாம் போற்றும் என் அன்பு பெரியப்பா இருப்பார். அவருடன் அவரது நண்பர் கணேசனும் நினைவுகூரப்படுவார் என்பதும், எங்கள் குடும்பத்துக்குப் பெருமை அளிக்கக்கூடியது. அந்த வாய்ப்பினையும் அவர் எழுத்துகளே அளித்தன. ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக்கொடுக்காத அந்த அன்பு எங்களை வழிநடத்தும்..!”

...பகிர்வார்கள்

---

## துயர் துடைக்கக் கரம் கோர்ப்போம்!

அ.தி.மு.க. ஆட்சி வெள்ள பாதிப்பின் போது அரசு மக்களுக்கு உதவும் என்று எந்த எதிர்பார்ப்புமே பாதிக்கப்பட்டவர்களிடம் இருக்கவில்லை. அரசாங்கம் உதவப்போவதில்லை என்று உணர்ந்து கொண்டதாலோ என்னவோ அதிக எண்ணிக்கையில் தன்னார்வலர்கள் நிவாரணப் பணியைத் தங்களின் கைகளில் எடுத்துக் கொண்டார்கள்.

உதவி செய்பவர்களும் உதவி பெறுபவர்களும் அவரவர்களாகவே உதவியைப் பரிமாறிக் கொண்டார்கள். அன்றைய அரசாங்கம் அவர்களுக்கு உதவவும் இல்லை. அவர்களுக்கு இடையே தடையாக நிற்கவும் இல்லை.

ஆனால், தி.மு.க. ஆட்சியில் நிலைமை வேறு. அரசு பொறுப்பை கையில் எடுக்கிறது. அந்த எண்ணத்தில்தானோ என்னவோ பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் தமக்கு உதவ வேண்டுமென்ற எதிர்பார்ப்பு, பெருமளவில் இருக்கிறது. இதே காரணத்தால் கடந்த காலத்தைப் போல் அல்லாமல் போதுமான எண்ணிக்கையில் தன்னார்வலர்கள் இன்று வரை நிவாரணப் பணிக்கு வரவில்லை.

சதியை முறியடித்து, சவால்களை எல்லாம் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**-இளங்கோவன் கீதா**
**ஃபேஸ்புக் பதிவு**

---

## ஃப்ளாஷ்பேக்



அண்ணாதுரை

### முதல்முறை சந்திப்பு!

1996–ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள், திருவண்ணாமலை மாவட்டத்துக்கு வருகை தந்தார். அப்போது அவர் அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் வீட்டில் தங்கியிருந்த போது, அவரை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். முதல் முறையாக அவரைச் சந்தித்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டதை, இன்றைக்கு நினைத்தாலும் பரவசம் தரும் உணர்வாக இருக்கிறது. சந்திப்புக்குப் பிறகு அவருடன் புகைப்படம் எடுத்துக் கொண்டேன்.

**-ரா.அண்ணாதுரை, கிளைச் செயலாளர், மேல்கச்சிராப்பட்டு, திருவண்ணாமலை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்

### புயல் நிவாரணத்துக்கு நாடக நிதி!

**1952-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் வீசிய புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, கழகத்தின் சார்பில் நிதி திரட்டி, அந்தப் பணத்தைக் கொண்டு கைத்தறி வேட்டி- சேலைகள் வாங்கி ஏழை எளியோருக்கு வழங்கப்பட்டது. அந்தப் பணிக்கு கலைஞரை தலைவராக இருக்குமாறு கழகம் தீர்மானம் நிறைவேற்றியது. அதற்காக கலைஞர், தான் எழுதிய ‘தூக்குமேடை’ எனும் நாடகம் நடத்தி நிதி திரட்டினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 324




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131